விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ பங்குனி மீ 06-ம் உ | திங்கட்கிழமை | (19 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 21 | ஓசை 29

## எட்டு மாதம் வரை ஒரிஸாவில் தங்க தமிழ்க்குழு அகதிகளுக்கு சலுகை

(புவனேஸ்வர்)

ஒரிஸாவில் கோரக்பூர் மாவட்டத்தில் இப்பொழுது அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ள தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் இரண்டு மாதங்களிலிருந்து எட்டு மாதங்கள் வரை அங்கு தங்கியிருக்கலாம் என்று ஒரிஸா முதலமைச்சர் பிஜி பட் நாயக் நேற்றுத் தெரிவித்தார்.

இந்தக் குழுக்கள் இங்கு தங்கியிருப்பதை எதிர்த்து ஆதிவாசிகளுடன் சேர்ந்து இந்திரா காங்கிரசைச் சேர்ந்த ஒரிஸா சட்டசபை உறுப்பினர் ரகுநாத் என்பவர் நடத்திய ஆர்ப்பாட்டம் குறித்து பிஜி பட் நாயக் அபிப்பிராயம் தெரிவிக்கையில் அவர் விஷயம் தெரியாமல் நடந்து கொண்டாரென்றும் இந்த அகதிகளுக்குத் தமிழ்நாடும் ஆந்திராவும் அனுமதி (6 ஆம் பக்கம் பார்க்க)

# "மீண்டும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முயல்கிறோம்"

## அன்னை பூபதியின் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும், பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் இரண்டு அம்சங்களையும் முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து மரணமடைந்த அன்னை பூபதியின் நினைவு தினம் வடக்கு கிழக்கு பிரதேசம் எங்கும் 19.03.88 தொடக்கம் 19.04.88 வரை எழுச்சித் தினமாகவும், அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இவ் நினைவு தினத்தில் பல்வேறு இடங்களிலும் அஞ்சலிக் கூட்டங்களும், உண்ணாவிரதங்களும், உருவப் படங்கள் திறந்து வைக்கப்படவும் உள்ளன.

## இந்தியப்படை வந்தும் செய்ய முடியாததை நாங்கள் செய்கிறோம்

### இந்தியப் பத்திரிகையாளருக்கு பாலசிங்கம் பேட்டி

(யாழ்ப்பாணம்)

இன்று நாம், நிலமை மாறிவரும் சூழ்நிலையில் வாழ்கிறோம். பத்து வருடகாலமாக இந்திய அமைதிப்படை இங்கிருந்த காலத்திலும் கூட வடக்கிலும், கிழக்கிலும் சட்டமும் ஒழுங்கும் இருக்கவில்லை. சட்டத்தையும், ஒழுங்கையும் மீளவும் நிலைநாட்ட இப்போது நாம் முயற்சிக்கிறோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இந்தியப் பத்திரிகையாளர் பன்னீர்ச்செல்வத்துக்கு நேற்றிரவு தெரிவித்தார்.

அன்ரன்பாலசிங்கம் மேலும் தெரிவித்ததாவது :-

கெரில்லாப் போராட்டத் தந்திரோபாயமாக நாம் சட்டத்தையும்ஒழுங்கையும்அமுல் செய்யும் நிறுவனங்களை செயலிழக்கச் செய்தோம். இந்திய அமைதிப்படை வரும் வரை யாழ்ப்பாணத்தீபகற்பம்எமது கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. இந்திய இராணுவத்தாலும் (6ஆம் பக்கம் பார்க்க)



## மட்டுநகர் - கொழும்பு இரவு ரயில் இன்று முதல் சேவையிலீடுபடும்

கொழும்பு மட்டக்களப்பு இரவு ரயில் சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படுமென்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று இரவு 8 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் இந்த ரயில் செவ்வாய்க்கிழமை காலை 6.00மணிக்கு மட்டக்களப்பை சென்றடையும்.

இதேபோல மட்டக்களப்பிலிருந்து செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை 5 30 க்கு கொழும்பைச்சென்றடையும்.

1987 செப்டம்பர் மாதத்திலிருந்து இந்த இரவு ரயில் சேவை நிறுத்தப்பட்டது.

## தபால் பெட்டிகளின் சீர்குலைவு

புங்குடுதீவுப் பகுதியில் உள்ள சுமார் இருபதிற்கும் மேற்பட்ட தபாற் பெட்டிகள் கடந்த பல வருடங்களாக திருத்தியமைக்கப்படாத நிலையில் உள்ளன.

இதனால் பொதுமக்கள் அந்தந்த பெட்டிகளில் தபால்களைப் போட முடியாமல் 'பிரதான தபாற் கந்தோரை' நாடுகிறார்கள்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - இலங்கை ஒப்பந்தம்

# இலங்கை மீறினால் கச்சதீவு ஒப்பந்தத்தை இந்தியா மீறுமா?

(புதுடில்லி)

எதிர்வரும் 24ம் திகதி இந்தியப்படை இலங்கையை விட்டு முற்றாக வெளியேறிய பின்னர் இலங்கை, இந்திய வட்டாரங்களில் கருத்துக்கள் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நிறை... தியப் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமனின் உரையும் வலியுறுத்துவதாக உள்ளது.

ஒப்பந்தத்தை உறுதி செய்வதற்காக கச்சதீவு ஒப்பந்தத்தையும், இந்திய இலங்கை (6 ஆம் பக்கம் பார்க்க)

## மினிவான் மோட்டார் சைக்கிள் விபத்தில் 13 பேர் காயம்

(கதுமலை)

மிதமிஞ்சிய வேகமே காரணம்

இன்று நாம், நிலமை மாறிவரும் சூழ்நிலையில் வாழ்கிறோம். பத்து வருடகாலமாக இந்திய அமைதிப்படை இங்கிருந்த காலத்திலும் கூட வடக்கிலும், கிழக்கிலும் சட்டமும் ஒழுங்கும் இருக்கவில்லை. சட்டத்தையும், ஒழுங்கையும் மீளவும் லைநாட்ட இப்போது நாம் முயற்சிக்கிறோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இந்தியப் பத்திரிகையாளர் பன்னீர்ச்செல்வத்துக்கு நேற்றிரவு தெரிவித்தார்.

அன்ரன்பாலசிங்கம் மேலும் தெரிவித்ததாவது :-

கெரில்லாப் போராட்டத் தந்திரோபாயமாக நாம் சட்டத்தையும்ஒழுங்கையும்அமுல் செய்யும் நிறுவனங்களை செயலிழக்கச் செய்தோம். இந்திய அமைதிப்படை வரும் வரை யாழ்ப்பாணத்தீபகற்பம்எமது கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. இந்திய இராணுவத்தாலும்

(6ஆம் பக்கம் பார்க்க)



...ருந்து புறப்படும் இந்த ரயில் செவ்வாய்க்கிழமை காலை 6.00மணிக்கு பட்டக்களப்பை

1987 செப்டம்பர் பாதத்திலிருந்து இந்த இரவு ரயில் சேவை நிறுத்தப்பட்டது.

'பிரதான தபாற் கநதோரை' நாடுகிறார்கள்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மினிவான் மோட்டார் சைக்கிள் விபத்தில் 13 பேர் காயம்

(சுதுமலை)

அச்சுவேலியில்இருந்துயாழ். நோக்கி வந்த 29 சிறி 5348 இலக்கம் கொண்ட பயணிகள் மினிபஸ் ஒன்று மோட்டார் சைக்கிளையும் மோதிவிட்டு திசைதிருப்பி கல்வியன்காட்டு சந்திக்கு மிக அண்மையில் இருக்கும் சட்டநாதர் கோவில் தேர்முட்டியிலும் மோதிக் கொண்டது.

## மிதமிஞ்சிய வேகமே காரணம் என மக்கள் அங்கலாய்ப்பு

இந்த விபத்தில் மினிபஸ்சில் வந்த பதின்மூன்று பயணிகளும் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபரும் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்று காலை நடைபெற்ற இந்த விபத்திற்கு மினிபஸ்சின் அதிவேகமே காரணம் என்று அங்கு நின்ற பொதுமக்கள் பேசிக் கொண்டார்கள்.

மோட்டார் வாகனங்களின் வேகக்கட்டுப்பாடுகள் பற்றி சில நாட்களுக்கு முன்னர் மினிபஸ்சங்கத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# 8 ஆம் ஆண்டிலும் புலமைப் பரிசில் பரீட்சை

(பண்டத்தரிப்பு)

எதிர்காலத்தில் புலமைப் பரிசுபெற பல வறிய மாணவருக்கு வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் ஆண்டு 5 திலும், ஆண்டு 8 லும் புலமைப் பரிசில் பரீட்சைகள் நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கல்வி அமைச்சர் ெளரவலொக்கு பண்டாராவின் இவ்வரிய திட்டத்தால் 5ஆம் ஆண்டில் தவறும் வறிய மாணவர்களுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் 8ஆம் ஆண்டில் வழங்கப்படுகின்றது.

இதன் பயனாக பல மாணவர்களுக்கு கல்வியால் உயர வாய்பபு ஏற்படுத்தப்படுகின்றது. (12)

# பாடசாலைக்கு தீ வைக்க முயற்சி

(சித்தங்கேணி)

காரைநகரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றினுள் நள்ளிரவில் புகுந்த விஷமிகள் சிலர் பாடசாலைத் தளபாடங்களைச் சேதப்படுத்திய

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய இராணுவத்தால் 18ல. ரூபா தொலைபேசி கட்டணம் நட்டம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்தியப்படை இருந்தபோது பாவித்த தொலைபேசிக் கட்டணம் பதினேழு லட்சத்து எழுபத்தோராயிரம் ரூபா தொலைத் தொடர்பு திணைக்களத்துக்கு செலுத்த வேண்டியுள்ளது.

இந்தியா உட்பட ஏனைய வெளிநாடுகளுக்கும் இந்தியப் படையினர் சர்வதேச தொலைபேசி இணைப்பு பாவித்ததாகவும் தொலைத் தொடர்புகள் திணைக்கள உயர் அதிகாரி ஈழநாதத்திற்கு தெரிவித்தார்.

இந்த சர்வதேச தொலைபேசி இணைப்புக் கட்டணமாக ஆறு லட்சத்து இருபத்தி மூவாயிரத்து எண்ணூற்றி அறுபத்தைந்து ரூபா செலுத்த வேண்டியிருக்கிறது. எனவும் அவர் சொன்னார்.

(6-ஆம் பக்கம் பார்க்க)

# போதைவஸ்து கடத்தலுக்கு மரணதண்டனை வழங்கப்படும்

(கொழும்பு)

கள்ளச்சாராயம்; போலி நோட்டு, போதை வஸ்து, ஆயுதம் வைத்திருத்தல் போன்ற குற்றங்களுக்கு அதி உயர் தண்டனை வழங்கும் திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளது.

இந்தக் குற்றங்கள் நாடு முழுவதும் தினமும் அதிகரித்து வருவதால் இதனைக் கொண்டுவர அரசு யோசித்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் போதை வஸ்து கடத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய - இலங்கை ஒப்பந்தம்

# இலங்கை மீறினால் கச்சதீவு ஒப்பந்தத்தை இந்தியா மீறுமா?

(புதுடில்லி)

எதிர்வரும் 24ம் திகதி இந்தியப்படை இலங்கையை விட்டு முற்றாக வெளியேறிய பின்னர் இலங்கை, இந்திய இலங்கை ஒப்பந்தத்தைக் கைவிடும் என புதுடில்லியில் அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுவதாக உறுதியாகத் தெரிய வருகின்றது.

அவ்வாறு இந்திய இலங்கை ஒப்பந்தத்தை இலங்கை கைவிடுமேயானால் கச்சதீவு தொடர்பான ஒப்பந்தத்தில் இந்தியா பின் வாங்கலாம் என புதுடில்லியில் அரசியல் வட்டாரங்களில் கருத்துக்கள் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதையே இந்தியா இன்றும் விரும்புகின்றது. இதனையே அண்மையில் இந்தியப் பாரளுமன்றத்தில் உரை நிகழ்த்திய இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமனின் உரையும் வலியுறுத்துவதாக உள்ளது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை இலங்கை மீறுமேயானால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை உறுதி செய்வதற்காக கச்சதீவு ஒப்பந்தத்தையும், இந்திய இலங்கை

(6 ஆம் புக்கம் பார்க்க)

# ஜீ.சி.ஈ. (சா.த) பரீட்சை மார்ச் 30 இல்

(கொழும்பு)

இம்மாதம் 30ம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குரிய அனுமதிப் பத்திரங்கள் சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை ஐந்து லட்சத்து ஐம்பதினாயிரம் பேர் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளார்கள்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பி. பி. ஸி. நிருபரின் அறை சனிக்கிழமை தீப்பிடித்தது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பி.பி.ஸி. நிருபர் திரு. கிறிஸ் நற்றோல் கொழும்பில் தங்கியுள்ள ஹொட்டல் அறை நேற்று முன்தினம் இரவு திடீரென தீப்பிடித்தது.

இச்சம்பவ நேரம் அவர் வெளியில் சென்றிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் இவர் செய்தி தொடர்பாக இரகசிய பொலிஸாரால் விசாரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## போகும் போதும் அசிங்கம்

(மயிலிட்டி)

இலங்கையிலிருந்து இம்மாதம் இருபத்தி நான்காம் தேதி இறுதியாகப் புறப்பட்டுச் செலவிருக்கும் இந்திய இராணுவத்தில் எஞ்சியிருக்கும் சிலர் நாடு திரும்பும் உற்சாகத்தில் மயிலிட்டி, தையிட்டிப் பகுதியிலுள்ள சிலர் நிர்வாணமாகக் கூடி நாட்டியமாடினார்களாம் மிகஅசிங்கத்தனமாக நடந்து கொண்ட இவர்களுக்குஅஞ்சி இப்பகுதியில் உள்ள பெண்கள் வீடுகளை விட்டு வெளியேறி தூர இடங்களுக்குச் சென்று தங்கியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ். நகர போக்குவரத்தைச் சீரமைக்க மாநகரசபை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்குள் போக்குவரத்துப் பொலீசார் இல்லாமலே போக்குவரத்து ஒழுங்குகளை செய்வதற்கு யாழ். மாநகரசபை முயற்சி செய்து வருகிறது இதன் முதற்படியாக நேற்று ஒரு கலந்துரையாடல் நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலுக்கு மாநகர சபை ஆணையாளர் திரு வி. யி. பாலசிங்கம் உள்ளூராட்சி ஆணையாளர் திரு க. டிவகலாலா ஆகியோர் உட்பட வர்த்தகர் சங்கத்தலைவர், மினிபஸ் சங்கத்தலைவர், இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகள் உட்பட பல சங்க அங்கத்தவர்கள், மாநகரசபை அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றினர்

இக்கலந்துரையாடலில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் வீதி ஒழுங்குகள் பற்றியும் புகிய சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது இதில் கஸ்தூரியார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# முன்னூற்றிஐம்பதுகிராம் பாணிலும், பேக்கரியாளர்களுக்கு நட்டமாம்!

(யாழ்ப்பாணம்)

அரசின் கட்டுப்பாட்டு விலைக்கு 450 கிராம் பாணை தயாரித்து விற்க முடியாத நிலையில் பேக்கரிகள் இருப்பதாகவும் தற்போது 350 கிராம் பாண் தயாரித்து விற்கவே 91 ரூபா 95 சதம் நட்டமேற்படுகிறது என பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது இத்தகவல் வெளியிடப்பட்டது.

அத்துடன் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் முற்பணம் கட்டி பல நாட்களாலேயே மா கிடைப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் மாவின் விலை பல

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அகால மரணம்

(பண்டத்தரிப்பு)

59 வயது சிற்பாசாரி ஒருவர் இராசகோபுரத்தில் இருந்து விழுந்து அகால மரணம் அடைந்துள்ளார்.

விழுந்ததும் மூர்ச்சித் திருந்தவரை பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றும் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

வல்லிபுரக் கோவில் இராச கோபுரத்தில், வேலை செய்து கொண்டிருந்த பொழுது தவறி விழுந்து பரிதாபமாக மரணத்தைத் தழுவிக்கொண்டவர் கோபாலசாமி ஐயாப்பிள்ளை என்பவராவர்

(12(

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

தூய வெள்ளை நிறமான மேசை உப்புத் தூள் (Table Salt) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு, M. G. M. No. 777, K. K. S. Road, Jaffna. (B/66)

சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

சேவை

பித்தளை, செம்புப்பொருட்கள் கார், சைக்கிள் பாகங்களுக்கு குறோமியம் மின்பூச்சுகள் செய்துகொடுக்கப்படும். ஆஷா எலக்றோ பிளேற்றர்ஸ் அன்ட் மெற்றல் இன்டஸ்றீஸ் 148, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (B 304)

சமூகக்கல்வி

ஆண்டு 6 சமூகக்கல்வி வரலாறு செயல்நூல் விற்பனையாகிறது. ஆக்கம்: துரைசிங்கம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். சிறிகாந்த் புத்தகசாலை யாழ்ப்பாணம். B/313

ஆதிகாலம் தொட்டு வைத்திய சேவையில் ஈடுபட்டு வரும் வைத்தியர், உழுக்கு, முறிவு, நோவு முதலியவற்றை குணமாக்குவதற்கு கை தேர்ந்த வைத்தியர்.

## மின்விநியோகம் செய்யப்படவில்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஆலடிச் சந்தியில் உள்ள மின்மாற்றி மூலம் வல்லனின் ஒரு பகுதியாக மாவுதிடல் வரைக்கும்மடத்துவெளி நாகதம்பிரான் கோவிலடியில் உள்ள மின்மாற்றி மூலம் குறிப்பிட்ட ஒரு சிறு பகுதிக்கும் மாத்திரமே மின விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

வல்லன் பகுதியின் ஏனைய பகுதிகளுக்கு இதுவரை மின் விநியோகம் செய்யப்படவில்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (22)

# நாட்டின் அமைதியின்மைக்குக் காரணம் முன்னைய காலங்களில் நடைபெற்ற நியமனங்களே

## -புத்தளத்தில் ஜனாதிபதி பிரேமதாசா பேச்சு

(புத்தளம்)

அரசாங்கத்தின் தேசிய மொழிக் கொள்கையும், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றில் ஊழியர்களைச் சேர்க்கும் கொள்கையும் இம்மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா நேற்று புத்தளத்தில் நடமாடும் ஜனாதிபதி அலுவலக இறுதிநாள் வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

இதனை அமுல் செய்வது குறித்து அமைச்சுக்களின் செயலாளர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அமைச்சுக்கள், ராஜாங்க அமைச்சுக்களின் சிரேஷ்ட செயலாளர்கள் பங்குபற்றிய மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றினார்.

இந்தப் புதிய கொள்கைகளை நடைமுறைப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

பெயர்ப்பலகைகள், தபால் தலைப்புக்கள், ஏனைய பத்திரங்கள் என்பன மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய ஜனாதிபதி,

ஊழியர்கள் நியமனத்தில் கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் தகுதி அடிப்படையில் அவற்றை வழங்கவேண்டும் என்றும் தகுதி திறமை அடிப்படையில் பதவி உயர்வும் வழங்கப்பட வேண்டும் என்றார்.

வேலை வழங்கும் போது ஜனசக்தி உதவி பெறும் குடும்பத்தினருக்கும் ஜே. வி. பி. நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கும் முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும் இலவச கட்சி, அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் நடைபெற வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இனிமேல் எம். பிக்கள் பிரமுகர்களின் சிபார்சுக் கடிதங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது நிறுத்தப்படவுள்ளது வெற்றிடங்கள் ஏற்பட்டால் அவற்றிற்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு அவற்றின் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும்.

பயிற்சி ஆசிரியர்கள் நியமனத்தில் பல தில்லு முல்லுகள் இடம்பெற்றதாக ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் ஜனாதிபதிசுட்டிக்காட்டினார்

முப்படைகள், பொலிஸ் நியமனங்களிலும் இதே கொள்கை அமுல் செய்யப்படும். முன்னைய காலங்களில் நடைபெற்ற தவறான நியமனங்கள் காரணமாகவே நாட்டில் தற்போது அமைதியின்மை ஏற்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி கூறினார்.

# ஓராண்டு வீர அஞ்சலி

## 19-3-89 அன்று இந்திய ஆக்கிரமிப்பு ப்படையுடன் ஏற்பட்ட மோதலில் மூன்று புலிகள் வீர மரணம் அடைந்தனர்



லெப்டினன்ட்
பவானந்தன் சரவணானந்தன்
(பவான்) V.M றோட்
மண்ணில் 4- 7- 71
மண்ணிற்காக 19- 3- 89



இளம் புலி
கனகவேற்பிள்ளை ஹரிகரன்
(கரி) புலோலி
மண்ணில் 29- 12- 69
மண்ணிற்காக 19- 3- 89



இளம் புலி
நடேசு சிவதாசன்
(றோசான்) அல்வாய்
மண்ணில் 15- 1- 71
மண்ணிற்காக 19- 3- 89

## மாத்தயா நெல்லியடிக்கு வந்தார்

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் திரு. மகேந்திரராசா (மாத்தயா) நேற்று முன்தினம் வடமராட்சிக்கு வந்தார்.

நெல்லியடி, கரவெட்டிப் பகுதிக்கும் வந்த இவர் இந்திய இராணுவ மோதலில் இறந்தவர்களின் குடும்பங்களையும் சந்தித்தார். கடந்த கால போராட்ட வரலாற்றுக்கு உறுதுணையாக நின்றவர்களுக்கு நன்றி கூறினார்.

## பயணம்

(கரவெட்டி)

பெங்களூரில் நடைபெறவுள்ள சார்க் மகளிர் குழு மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி பவானி தங்கத்துரை பெங்களூர் பயணமாகியுள்ளார்

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் மேற்படி பெங்களூர் பயணமாகும் திருமதி பவானி தங்கத்துரை முன்னர் நேபாளத்தில் நடைபெற்ற மகாநாட்டில் கலந்து

## யாழ் நகரில் இன்றைய சினிமா

80 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**

வின்சர் - யாழ்
10.30 2.30 6.30
மோகன் - சுகாஷினி
**நெஞ்சத்தைக்**

யாகிறது. ஆக்கம்: துரை சிங்கம். எல்லாப் புத்தக சாலைகளிலும் கிடைக்கும். சிறிகாந்த் புத்தகசாலை யாழ்ப்பாணம். B/313


ஆதிகாலம் தொட்டு வைத்திய சேவையில் ஈடுபட்டு வரும் வைத்தியர், உழுக்கு, முறிவு, நோவு முதலியவற்றை குணமாக்குவதற்கு கைதேர்ந்த வைத்தியர்.

டாக்டர் டோமினிக்

(சென்.பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக)

சென். பற்றிக்ஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

(B/292)


## நினைவு மண்டபம்

(யாழ்ப்பாணம்)

வீரமரணமடைந்த மேஜர் கமலின்ஞாபகார்த்தமாக கனகாம்பிகைக்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவு மண்டபம் எதிர்வரும் 23 ஆம் திகதி திறந்துவைக்கப்படும்.

பொதுமக்களால் அமைக்கப்பட்டுள்ள இம் மண்டபத் திறந்து வைத்தல் நிகழ்ச்சியில் வன்னிப் பிராந்திய விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. சந்திரனும் கலந்து கொள்ளவிருக்கின்றார்.







| லெப்டினன்ட் | இளம் புலி | இளம் புலி |
|---|---|---|
| பவானந்தன் சரவணானந்தன் | கனகவேற்பிள்ளை ஹரிகரன் | நடேசு சிவதாசன் |
| (பவான்) V.M றோட் | (கரி) புலோலி | (றோசான்) அல்வாய் |
| மண்ணில் 4-7-71 | மண்ணில் 29-12-69 | மண்ணில் 15-1-71 |
| மண்ணிற்காக 19-3-89 | மண்ணிற்காக 19-3-89 | மண்ணிற்காக 19-3-89 |

மண்ணை நேசித்ததால் மரணத்தை அரவணைத்தார்கள்
காலைப் பொழுதினிலே கபடமாக வந்து
காளைகளைக் கொன்றனர் விடுதலை விரும்பி
வீரத்துடன் விடுதனை விட்டு
விடுதலைப் புலியுடன் சேர்ந்து
வீர மரணமடைந்தனர்
நீங்கள் நடந்த செம்பாதையில்
எங்கள் பயணம் தொடரும்

வடமராட்சி,
பருத்தித்துறை.

உறவினர், நண்பர்கள்.

பகுதிக்கும் வந்த இவர் இந்திய இராணுவ மோதலில் இறந்தவர்களின் குடும்பங்களையும் சந்தித்தார். கடந்த கால போராட்ட வரலாற்றுக்கு உறுதுணையாக நின்றவர்களுக்கு நன்றி கூறினார்.

## பயணம்

(கரவெட்டி)

பெங்களூரில் நடைபெறவுள்ள சார்க் மகளிர் குழு மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி பவானி தங்கத்துரை பெங்களூர் பயணமாகியுள்ளார்

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் மேற்படி பெங்களூர் பயணமாகும் திருமதி பவானி தங்கத்துரை முன்னர் நேபாளத்தில் நடைபெற்ற மகாநாட்டில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.


தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை

வின்சர் - யாழ்
10.30 2.30 6.30
மோகன் - சுகாஷினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே


### மட்டக்களப்பில்

## மக்கள் வங்கிக் கிளைகளில் வேலைகள் மந்தகதியில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் வங்கி வேலைகள் யாவும் மந்தகதியிலேயே நடைபெறுவதாகப்பொதுமக்கள் புகார் தெரிவிக்கிறார்கள்.

மட்டக்களப்பு மக்கள்வங்கி நகரக் கிளையில் வைப்புச் செய்யப்படும் காசோலைகள் களுவாஞ்சிக்குடி மக்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டு அவை மாற்றிவர சுமார் 14 நாட்கள் எடுப்பதாகவும், இதனால் வாடிக்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

தபால் சேவையில் எந்த வித தாமதமும் தற்போது இல்லாதபொழுதிலும் மேற்படி தாமதம் குறித்து வாடிக்கையாளர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

மேற்படி வங்கியில் புதிய கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கும் இரண்டு நாட்கள் செலவிடவேண்டிய அவல நிலை காணப்படுகிறதாம். பத்திரங்களை நிரப்பிப்பணம் கட்டிய அன்று பணவைப்புப் புத்தகம் வழங்கப்படாது மறுநாளே அப்புத்தகம் வழங்கப்படுகிறது. இதனால் வாடிக்கையாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள்.

இது தொடர்பாக வாடிக்கையாளர்களின் அசௌகரியங்களை நீக்க வங்கியின் உயர் அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வாடிக்கையாளர் கோருகின்றனர். (39)


ஈழநாதம் நாளேடு ஈழமண்ணில் சிறப்பாக புதுவித ஆக்கங்களை வெளியிடவும்
எங்கள் பணியை வழங்கி வாழ்த்துகின்றோம்.
சகலவிதமான மிதிவண்டிகள், சிறுவர் வண்டிகள், உப உறுப்புக்கள், லோட்டசு டயர் டியூப்புகள்
நிதான விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்:
E. S. பேரம்பலம் அன் சன்ஸ்
50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(B.301)

## மட்டக்களப்பு அரசாங்க அதிபரின் முதல் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் புதிய அரசாங்க அதிபர் திரு. யோகநாதன் பதவியேற்ற பின்னர் சனியன்று புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான கூட்டம் ஒன்றை நடாத்தினார் இதில் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்,

## நியமனத்தை காணவந்த பெற்றோர் விரட்டப்பட்டனர்!

(மட்டக்களப்பு)

தமது பிள்ளைகளுக்கு பயிலுனர் ஆசிரிய நியமனம் வழங்கும் வைபவத்தை காண வந்த பெற்றோர் வைபவம் நடைபெற்ற கல்லூரி அதிபரால் மண்டபத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

கடந்த வார இறுதியில் மட்டக்களப்பு புனித சிசிலியா கல்லூரியில் ஆசிரிய பயிலுனர்க்கான நியமனம் வழங்கும் வைபவம் நடைபெற்றது.

நியமனம் பெற இருந்தவர்களுடன் அவர்களின் பெற்றோரும் தமது பிள்ளைகளின் நியமனம் வழங்கும் வைபவத்தைக் காண ஆவலுடன் மண்டபத்திற்கு வந்திருந்தனர்

வைபவம் ஆரம்பமாவதற்கு ஒருசில நிமிடங்களுக்கு முன்னர் ஆசிரிய பயிலுனர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களைத்தவிர அவர்களின் பெற்றோர் உடனடியாக மண்டபத்தைவிட்டு வெளியேறுமாறு மேற்படி கல்லூரி அதிபரால் உத்தரவிடப்பட்டது.

பெற்றோர்கள் அவமானத்துடனும், கவலையுடனும் மண்டபத்தை விட்டு வெளியேறியபோது கல்லூரி வளவைவிட்டே வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டது.

மேற்படி சம்பவம் குறித்து பெற்றோர் அதிருப்தியும், கவலையும் தெரிவித்துக் கொண்டனர். (39)

## நெடுங்கேணி

## கொள்ளை, கொலை முயற்சி பெண்ணுக்கு மரணதண்டனை

(நெடுங்கேணி)

நெடுங்கேணி-கோயிற் புளியங்குளம் என்ற இடத்தில் சில தினங்களுக்கு முன்பு இடம் பெற்ற கொள்ளை, சிறுமியின் கொலை முயற்சி என்பன தொடர்பாக கைதான நிர்மலாதேவிசிவலோசனன் என்ற பெண்ணுக்கு விடுதலைப்புலிகள் மரணதண்டனை விதித்தனர்.

வீடொன்றில் ஒருவருமில்லாத நேரம் நலகைகளை கொள்ளையடித்தபோது அதனை நேரில் கண்ட சிறுமியை இப்பெண் கழுத்தை நெரித்து காட்டுப்பகுதியில் விட்டுச்சென்றார். ஆனால் அச்சிறுமி உயிர்பிழைத்துவிட்டதால் கொள்ளை அம்பலத்துக்கு வந்தது.

இதனையடுத்து இந்தப் பெண் விடுதலைப்புலிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

## அன்னை பூபதியின் நினைவாக ஞாபகார்த்தப் பணிகள்

(மட்டக்களப்பு)

"தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம்" "தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை" மேற்படி கோரிக்கைகளை முன் வைத்து சாகும்வரை உண்ணாவிரதப்போரில் உயிர் நீத்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் ஓராண்டு நினைவு தொடர்பாக இன்று 19ஆந் திகதி தொடக்கம் அடுத்தமாதம்19ம் திகதிவரையில்ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள நினைவு பணிகளில் வருங்கால சந்ததி நினைவு கூரும் வகையில் சில ஞாபகார்த்தப்பணிகளும் மேற்கொள்ளப்படும்.

★ அன்னை பூபதி பிறந்த கிராமத்திலுள்ள 30 வீட்டுத் திட்டம் "அன்னை பூபதி கிராமம்" எனபெயர் மாற்றம்

★ நகரிலுள்ள வீதியொன்றுக்கு "சாத்வீக அன்னை பூபதி வீதி" என பெயர் சூட்டுதல்

★ அன்னையின்நினைவுதூபி அமைத்தல் போன்றன இதில் அடங்கும் என நினைவு பணி குழு பிரமுகரொருவர் தெரிவித்தார். (37)

## ஓட்டுத் தொழிற்சாலையை புனரமைக்க வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

இலுப்படிச்சேனை ஓட்டுத் தொழிற்சாலையை கூடிய விரைவில் புனரமைப்பு செய்யுமாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சை கேட்டுள்ளார்.

புனர் வாழ்வுத் திட்டத்தின் கீழ் மாறிய அடிப்படையில் வீடு கட்டுவதற்கு ஏராளமான ஓடுகள் தேவைப்படுகின்றன. இத் தொழிற்சாலை இயங்காததினால் வெளியிடங்களிலிருந்து பெருந் தொகையான பணச் செலவில் ஓடுகளைத் தருவிக்க வேண்டியுள்ளது. இதனால் குறைந்த செலவில் வீடுகட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின் அசமந்த போக்கே மேற்படி ஓட்டுத் தொழிற்சாலை திருத்தப்படாமைக்கு காரணம் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (39)

## அச்சுவேலிதபால்நிலையத்துக்கு நிரந்தர கட்டடம் தேவை

(அச்சுவேலி)

அச்சுவேலி தபால் நிலையத்திற்கு நிரந்தரமான கட்டடம் அமைக்கப்பட வேண்டும் என அச்சுவேலி அபிவிருத்திக் குழு தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சைக் கேட்டுள்ளது.

அச்சுவேலி தபால் நிலையத்திற்கு நிரந்தரமான கட்டடம் இல்லாமல் இருப்பதால் காலத்திற்கு காலம் தபால் நிலையம் இடமாற்றப்படுவது பொதுமக்களுக்கும் தபால் நிலைய செயற்பாட்டிற்கும் இடையூறாக உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்

## சுன்னாகம் பகுதி

# கொர்பச்சேவின் கடிதத்தை லித்வேனியதலைவர்கள் அலட்சியம்

(மொஸ்கோ)

கொர்பச்சேவ் அனுப்பி வைத்த இறுதி எச்சரிக்கை கடிதத்திற்கு லித்வேனிலப் பாராளுமன்றம் விரைந்து பதில் அனுப்பப் போவதில்லை என்று அறிவித்துள்ளது. லித்வேனிய தலைவர் லாஸ் பேகட் கொர்பச்சேவ் அனுப்பிய இந்தக் கடிதம் பற்றிய விடயம் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் அத்தனை முக்கிய இடத்தில் இல்லை என்றும் தெரிவித்தார்.

இவ்வாறு லித்வேனியா அறிவித்த சுதந்திரப் பிரகடனம் செல்லுபடியற்றது என சோவியத் பாராளுமன்றத் தீர்மானத்திற்கு ஏற்ப அவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் மூன்று நாட்களுக்குள் தெளிவான பதிலை எதிர்பார்க்கிறோம் என்று வெள்ளிக்கிழமை இரவு கொர்பச்சேவின் இறுதி எச்சரிக்கைக் கடிதத்தை அலட்சியப் படுத்திய லித்வேனிய ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் லித்வேனிய தலைவர் குறிப்பிடுகையில் மூன்று நாட்களுக்குள் பதில் அனுப்புவதையிட்டு நாம் கருத்திற் கொள்ளவில்லை. அதற்கு முன்பாக புதிய அரசு ஒன்றை நாம் தெரிவு செய்தாக வேண்டும். அந்தப்பணியே முக்கியமானது. அதுபற்றி முதலில் விவாதிப்போம் என்றார். அவரின் கடிதத்திற்கு லித்வேனிய அரசு மிரண்டு போய் விடாது. அக் கடிதத்தை பார்த்து நாம் பொருட்படுத்தப் போவதில்லை தனிநாடு தான் என அவர் வலியுறுத்திப் பேசினார்.

## பட்டிமன்றம்

(கரவெட்டி)

ஹாட்லிக்கல்லூரியின் உயர்தரமாணவர்களுக்கிடையே "ஈழத்தமிழர் புலம்பெயர்வது நன்மையா தீமையா" என்ற தலைப்பில் பட்டிமன்றம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

ஆசிரியர்திரு.என். குணசீலன் தலைமையில்நடைபெற்ற இப் பட்டி மன்றத்தில் "புலம் பெயர்வது நன்மை" என்ற அணியில் செல்வன்கள் எம். பகீரதன், ரி. தங்கவேலாயுதம், எஸ்.இரமேஷ் ஆகியோரும் புலம் பெயர்வது தீமை' என்ற தலைப்பில் செல்வன்கள் எஸ். தவசீலன் ரி. சேந்தன். ஜே. போல் றென்சிற் ஆகியோர் கலந்து கொண்டனர். (18)

## கூடையில் கைவிடப்பட்ட ஆண் குழந்தை

(விசேடநிருபர்)

யாழ்-கடற்கரை வீதி திருச்சிலுவை சுகநல நிலையத்தில் (17-3-90) மாலை 4-30 மணி அளவில் ஓர் ஆண் குழந்தை கூடை ஒன்றில் வைத்த நிலையில் கைவிடப்பட்டிருந்தது.

கூடையில் வைக்கப்பட்டிருந்த குழந்தையுடன் என்பலப் ஒன்றில்நூறுருபாவும்,ஓடிகோலோன், சோப், பவுடர் என்பனவும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

குழந்தை பிறந்து ஒருவாரத்துக்குள்ளாக இருக்கும் என்ற அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டபோதும் சரியாகத் தெரியவில்லை. குழந்தை இப்பொழுது திருச்சிலுவை சுகநல நிலையத்தில் (சிஸ்டர்வார்ட்)

# கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மாற்றம்; சீனாவிலும் சிந்தனை

(பீகிங்)

கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத்யூனியனிலும் இடம் பெற்ற அரசியல் பொருளாதார மாற்றங்கள், சீனத் தலைவர்களைச் சிந்திக்க வைத்துள்ளது. இவ்வாறு சீன அரச அதிகாரிகளிடையே உலாவி வரும் செய்திப் பத்திரிகை ஒன்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோசலிசம் முறியடிக்கப்பட்டதையும், சீனாவில் மட்டுமே அது ஆரோக்கியமாகச் செயற்படுவதையும் விரிவாக விளக்குகிறது.

மேலும் அப்பத்திரிகை குறிப்பிடுகையில், கொர்பச்சேவின் சீர்திருத்தங்கள் இன்று அந்நாட்டில் அவருக்கே பலத்த எதிர்ப்பைக் கொண்டு வந்திருக்கிறது என்றும், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் குறிப்பாக, சோவியத் யூனியன் தங்கள் பொருளாதாரத்தைச் சீராக கட்டியெழுப்பாமல் விட்டதுடன், ஊழலுக்கும் இடமளித்ததுமே, அந்நாடுகள் விலகுவதற்குக் காரணம் எனக் கூறுகிறது.

இப்பத்திரிகை சோவியத் யூனியனின் ஜனாதிபதி பற்றி குறை கூறியுள்ளது, அதாவது ஐரோப்பாவில் குளறுபடி மாற்றங்கள் ஏற்பட்ட போதெல்லாம் சோவியத் யூனியன் வெறுமனே கைகட்டி நிற்காமல். மேற்குலக நாடுகளுடனும், அமெரிக்காவுடனும் கொர்பச்சேவ் கைகோர்த்து, அனர்த்தம் அதிகரிக்க உதவி புரிந்தார் என்றும் குறை கூறியது. கிழக்கு ஐரோப்பாவில் சோசலிசம் வெற்றி பெறுவதாக கொர்பச்சேவ் வர்ணித்தமை பொய்யானது, போலியானது எனவும் கூறியது.

## பிரித்தானிய தூதரகம் ஒற்றர்களின் குகை

(பாக்தாத்)

பிரித்தானியப் பத்திரிகையாளருக்கு கடந்த வெள்ளிக்கிழமை மரண தண்டனை வழங்கியதற்கு பிரித்தானியா ஆட்சேபம் தெரிவித்ததைக் கண்டித்து ஈராக் தலைநகரம் பாக்தாத்திலும், வேறு நகரங்களிலும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தினார்ள். இவ் ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர். ஈராக்கிலுள்ள பிரித்தானிய தூதரகத்தை ஒற்றர் குகை என்று வர்ணித்த மக்கள் எதிர்ப்பு மனுவொன்றை அங்கு கையளித்தார்கள். ஈராக் ஆளும் கட்சியான பாத் கட்சியினாலேயே இவ் ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது.

## பாதுகாப்பு செலவினம் அதிகரிக்கப்படும் -வி. பி. சிங்

(புதுடில்லி)

இந்தியாவின் பாதுகாப்பு செலவினங்கள் பட்ஜட்டில் அதிகரிக்கும் என பிரதமர் வி. பி.சிங் சனியன்று பாராளுமன்றத்தில் கூறினார்.

நாட்டை எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகரித்து வருவதாலேயே இவ்வாறு அதிகரிக்க வேண்டியுள்ளது எனவும் அவர் சொன்னார்.

மரணமாகும் படையினரின் குடும்பங்களுக்குவழங்கப்படும் அரசின் நிதியுதவிகள் அதிகரிக்கப்படவுள்ளதாகவும்அவர் மேலும் கூறினார்.

இதேபோல ...

## இந்தியா கண்டனம்

(புதுடில்லி)

பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோ காஷ்மீர் ...

அழைக்கப்பட்டு பாரதத்தின் கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## புனரமைக்க வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

இலுப்படிச்சேனை ஓட்டுத் தொழிற்சாலையை கூடிய விரைவில் புனரமைப்பு செய்யுமாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சை கேட்டுள்ளார்.

புனர் வாழ்வுத் திட்டத்தின் கீழ் மாறிய அடிப்படையில் வீடு கட்டுவதற்கு ஏராளமான ஓடுகள் தேவைப்படுகின்றன. இத் தொழிற்சாலை இயங்காததினால் வெளியிடங்களிலிருந்து பெருந் தொகையான பணச் செலவில் ஓடுகளைத் தருவிக்க வேண்டியுள்ளது. இதனால் குறைந்த செலவில் வீடுகட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின் அசமந்த போக்கே மேற்படி ஓட்டுத் தொழிற்சாலை திருத்தப்படாமைக்கு காரணம் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (39)

பூபதி வீதி'' என பெயர் சூட்டுதல்

★ அன்னையின்நினைவுதூபி அமைத்தல் போன்றன இதில் அடங்கும் என நினைவு பணி குழு பிரமுகரொருவர் தெரிவித்தார். (37)

## அச்சுவேலிதபால்நிலையத்துக்கு நிரந்தர கட்டடம் தேவை

(அச்சுவேலி)

அச்சுவேலி தபால் நிலையத்திற்கு நிரந்தரமான சட்டடம் அமைக்கப்பட வேண்டும் என அச்சுவேலி அபிவிருத்திக் குழு தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சைக் கேட்டுள்ளது.

அச்சுவேலி தபால் நிலையத்திற்கு நிரந்தரமான கட்டடம் இல்லாமல் இருப்பதால் காலத்திற்கு காலம் தபால் நிலையம் இடமாற்றப்படுவது பொதுமக்களுக்கும் தபால் நிலைய செயற்பாட்டிற்கும் இடையூறாக உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு அச்சுவேலி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள அரசாங்கக் காணியில் அச்சுவேலி தபால் நிலையத்திற்கு நிரந்தரமான கட்டடம் அமைக்கப்படவேண்டும் என அச்சுவேலி அபிவிருத்திக் குழு தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சரிடம் கேட்டுள்ளது. (16)

## கூடையில் கைவிடப்பட்ட ஆண் குழந்தை

(விசேடநிருபர்)

யாழ்-கடற்கரை வீதி திருச்சிலுவை சுகநல நிலையத்தில் (17-3-90) மாலை 4-30 மணி அளவில் ஓர் ஆண் குழந்தை கூடை ஒன்றில் வைத்த நிலையில் கைவிடப்பட்டிருந்தது.

கூடையில் வைக்கப்பட்டிருந்த குழந்தையுடன் என்பலப் ஒன்றில் நூறுரூபாவும், ஓடிகோலோன், சோப், பவுடர் என்பனவும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

குழந்தை பிறந்து ஒருவாரத்துக்குள்ளாக இருக்கும் என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டபோதும் சரியாகத் தெரியவில்லை. குழந்தை இப்பொழுது திருச்சிலுவை சுகநல நிலையத்தில் (சிஸ்ரர்வார்ட்) வைக்கப்பட்டிருக்கிறது. (21)

## சேதமான ஆலயம் இன்று திறப்புவிழா

இந்திய இராணுவத்தால் சேதமாக்கப்பட்டு, முகாமாக பயன்படுத்தப்பட்ட அங்கிலிக்கன் தேவாலயம் திருத்தியமைக்கப்பட்டு, மீண்டும் வழிபாட்டுக்காக இன்று மாலை திறந்து வைக்கப்படவுள்ளது. அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்தவர்கள் இன்று இந்த வைபவத்திலும், ஆராதனையிலும் கலந்துகொள்வார்கள்.

## அஞ்சலிக்கூட்டம்

(நல்லூர்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில், ஆதீன முதல்வர் அருளாணையின் வண்ணம் அமரத்துவம் எய்திய யோகி சுத்தானந்த பாரதியார் அவர்களை நினைவுகூர்ந்து ஓர் அஞ்சலிக்கூட்டம் கவிஞர் திலகம் திரு. நாக பரமசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இன்று அந்நாட்டில் அவருக்கே பலத்த எதிர்ப்பைக் கொண்டு வந்திருக்கிறது என்றும், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் குறிப்பாக, சோவியத் யூனியன் தங்கள் பொருளாதாரத்தைக் சீராக கட்டியெழுப்பாமல் விட்டதுடன், ஊழலுக்கும் இடமளித்ததுமே, அந்நாடுகள் விலகுவதற்குக் காரணம் எனக் கூறுகிறது.

இப்பத்திரிகை சோவியத் யூனியனின் ஜனாதிபதி பற்றி குறை கூறியுள்ளது. அதாவது ஐரோப்பாவில் குளறுபடி மாற்றங்கள் ஏற்பட்ட போதெல்லாம் சோவியத்

கண்டித்து ஈராக் தலைநகரம் பாக்தாத்திலும், வேறு நகரங்களிலும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தினர். இவ் ஊர்வலத்தில் பல்லா

தார்கள். ஈராக் ஆளும் கட்சியான பாத் கட்சியினாலேயே இவ் ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது.

## பாதுகாப்பு செலவினம் அதிகரிக்கப்படும் -வி. பி. சிங்

(புதுடில்லி)

இந்தியாவின் பாதுகாப்பு செலவினங்கள் பட்ஜட்டில் அதிகரிக்கும் என பிரதமர் வி. பி. சிங் சனியன்று பாராளுமன்றத்தில் கூறினார்.

நாட்டை எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகரித்து வருவதாலேயே இவ்வாறு அதிகரிக்க வேண்டியுள்ளது எனவும் அவர் சொன்னார்.

மரணமாகும் படையினரின் குடும்பங்களுக்குவழங்கப்படும் அரசின் நிதியுதவிகள் அதிகரிக்கப்படவுள்ளதாகவும்அவர் மேலும் கூறினார்.

இதேபோல ஓய்வு பெறும் படையினருக்கும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படும் என்றும் இவற்றினாலேயே பாதுகாப்பு செலவினங்களை பட்ஜட்டில் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

## இந்தியா கண்டனம்

(புதுடில்லி)

பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோ காஷ்மீர் மக்களின் சுதந்திர போராட்டத்துக்கு பாகிஸ்தான் உதவி செய்யும். இதனை யாரும் தடுக்க முடியாது என்று கூறியது தொடர்பாக இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் வெளியுறவு அமைச்சுக்கு அழைக்கப்பட்டு பாரதத்தின் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதமரின் பேச்சு இங்கு வன்முறையை அதிகரிப்பதுடன். சிம்லா ஒப்பந்தத்தை மீறுவதாக அமையும் எனவும் தூதுவரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவுகளும் பாதிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுன்னாகம் பகுதி நிவாரணக் கொடுப்பனவுகள்

ஆயிரம்ரூபா மீளக்குடியமர்தல் நிவாரணம் ஸ்ரான்லிவீதி மக்கள் வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படவுள்ளது

அதன் விபரங்கள், கிராம சேவகர் பிரிவுகள் வருமாறு:- 24ஆம் திகதி சனிக்கிழமை குப்பிளான் J/101, 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏழாலை வடக்கு J/98, சுன்னாகம் (மிகுதி) 7ஆம் திகதி சனிக்கிழமை, ஏழாலைதெற்கு J/99 8ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை ஏழாலை மேற்கு J/97. 9-ஆம் திகதி திங்கள் போயாதினம் புன்னாலைக்கட்டுவன் J/100.

இதுவரையும் தமது நிவாரணப் பணத்தை பெறத்தவறிய வேறு பகுதி விண்ணப்பதாரரும்இத்தினங்களில் தமது நிவாரணப் பணத்தை பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளின் முதலாம் கட்ட நிவாரணம் முன்னர் சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் வழங்கப்பட்டு பாதுகாப்பு காரணங்களுக்காக தற்போது யாழ். ஸ்ரான்லி வீதி கிளையில் வழங்கப்படுகிறது.

## குடும்பநல சங்க நிதி திறைசேரிக்குத் திருப்பியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட குடும்பநல சங்கத்திற்கு அரசாங்கத்தினால் 1989 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 1 1/4 லட்சம் ரூபா நிதி பயன்படுத்தப்படாமல் அந்நிதி திறைசேரிக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட குடும்பநல சங்கசெயற் குழுவின் அசமந்த போக்கினாலும் மேற்படி மாவட்ட குடும்பநல சங்க அதிகாரிகள் குடும்பநல திட்டங்கள் எதையும் திறம்பட செயற்படுத்தாமையுமே இந்நிதி பயன்படுத்தப்படாமல் திறைசேரிக்கு திருப்பியனுப்ப காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மாவட்டத்தில் குடும்ப நலச்சங்கத்தின் செயற்பாடுகள் மந்த நிலையிலேயே இருப்பதாகவும், புகார் தெரிவிக்கப்படுகிறது.

## லஞ்ச ஊழல் 13 பொலிசார் வேலை நீக்கம்

(கொழும்பு)

பல இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கல் திருடிய பொலிஸ் விசாரணையை சமரசமாக்க இரண்டு இலட்சம் ரூபாவை லஞ்சமாகப் பெற்ற உயர் பொலிஸ் அதிகாரி உட்பட பதின்மூன்று பொலிசார் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிசாரும், லஞ்சத் திணைக்களமும் நடாத்திய விசாரணைகளையடுத்தே இவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

விதவைகளுக்கு

## சுய தொழில்த் திட்டம் நோராட் நிறுவனம் உதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்டூர் கிராமத்தில் காந்தி சேவா சங்கம் விதவைகளுக்கு சுய தொழில் வாய்ப்பு திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

நோராட் நிறுவனத்தின் உதவியுடன் அமுல்செய்யப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் இருபத்தைந்து விதவைகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இது தொடர்பான ஆரம்ப வைபவம் அண்மையில் சங்கத் தலைவர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு திருமலை ஆயர் அதி வண. கிங்சிலி சுவாம்பிள்ளை, இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ராஜேஸ்வரனந்தாஜீ ஆகியோர் தையல் மெசின்களையும் அதற்கான பத்திரங்களையும் வழங்கினர்.

## மட்டுநகரில் பயிற்சி ஆசிரியர்கள் நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயிற்சி ஆசிரியர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நியமனக்கடிதங்களை கல்விப்பணிப்பாளர் திரு. இ. சற்குணராசா கடந்த வியாழக்கிழமை வழங்கினார்.

மட்/சிசிலியாமகளிர் கல்லூரியில் வைபவ ரீதியாக இந்நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவ் வைபவத்தில் 300 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன; இன்று 19-ஆம் திகதி 129 பேருக்கான நியமனங்கள் வழங்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5022 விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சை, எழுத்துப்பரீட்சைக்கு தோற்றினர். இவர்களில் 429 பேர் பயிற்சி ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. கே. சோமசுந்தரம் தெரிவித்தார். (39)

## திக்கம் மதுபான வடிசாலைக்கு போதியளவுகள் கிடைப்பதில்லை

(கரவெட்டி)

திக்கம் மதுபான வடிசாலை தற்போது பரீட்சார்த்த உற்பத்தியை மேற்கொண்டு வருகிற போதிலும் தொடர்ச்சியாக கள் கிடைப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1987லிபரேஷன்ஒப்பரேஷன் நடவடிக்கையின் போது இந்த தொழிற்சாலை சேதமாக்கப்பட்டது. இதனால்பல ஆயிரம் பேர் வேலைகளை இழந்தனர்

பனை அபிவிருத்திச் சபை தலைவர் திரு. க நடராசா எடுத்த முயற்சியால் இந்த தொழிற்சாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

மண்டேலாவின்

## கோரிக்கைக்கு அமெரிக்கா மறுப்பு

(வாஷிங்டன்)

தென் ஆபிரிக்காவின் பொருளாதாரத் தடைகளை மேலும் இறுக்கமாக்கி பிறிற்ரோறியாவுடன் ராஜதந்திர உறவுகளையும் முறித்துக் கொள்ளும்படி மேற்கு நாடுகளை நெல்சன் மண்டேலா கேட்டிருந்தார். அமெரிக்கா மண்டேலாவின் இக்கோரிக்கையைப்புதனன்று நிராகரித்துள்ளது.

நெல்சன் சென்ற செவ்வாயன்று ஸ்ரொக்ஹோமில் இக்கோரிக்கையை விடுத்ததன் மூலம் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நிலைப்பாட்டை மீளவும் அவர் வலியுத்துகிறார் என அமெரிக்க ராஜாங்கஇலாகாவின் பேச்சாளர் மார்கிறற் தட் வில்லர் தெரிவித்தார்.

இருபக்கங்களுடனும் தொடர்பு கொண்டு, பேச்சு வார்த்தைகள் இடம் பெற உதவுதல் மூலம் நாம் ஆதரவு வழங்கலாம் என்று அப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

தென் ஆபிரிக்காவுடனான தொடர்புகளில், மேற்கு நாடுகளின் நிலைப்பாடு பிறிற்ரோறியாவின் இனவாதத்துக்குஒரு முடிவைக்கொணரவைப்பதை தாம் மனப்பூர்வமாகவரவேற்பதாக மண்டேலா தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் பொதுநூலகம் மாலை 6க்கு மூடப்படுகிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சகல அலுவல்களும் வழமைக்குத் திரும்பிய போதிலும் மட்டக்களப்பு பொதுநூலகம் மூடப்படும் நேரத்தில் மட்டும் மாற்றம் செய்யப்படவில்லை.

முன்னர் இரவு 8 மணி வரையும் திறந்திருக்கும் பொது நூலகம் பின்னர் நாட்டிலுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மாலை 6.00 மணி முதல் மூடப்பட்டு வந்தது.

தற்பொழுது சகல அலுவல்களும் வழமைக்குத் திரும்பியதுடன் போக்குவரத்துச் சேவைகளும் சீரடைந்துள்ளமையால் வழமைபோல் இரவு 8 மணிவரை பொது நூலகம் திறக்கப்பட வேண்டும் என வாசகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அலுவலகங்களில் வேலை பார்ப்போரும் ஏனையோரும் 6 மணிக்குப் பின்னரே பொது நூலகத்திற்குச் செல்ல நேரம் கிடைக்கிறது. ஆகவே பொது மக்களின் வசதிக்காக இரவு எட்டு மணி வரையும் திறக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (39)

# நயினாதீவு கடற்படையினர் சோதனைகள் நிறுத்தம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் செல்லும் பிரயாணிகள், நயினாதீவுக் கடற்படைத் துறைமுகத்திற் தடுத்து வைக்கப்பட்டுப் பரிசோதனை செய்வதால் ஏற்பட்டு வந்த காலதாமதம் தற்பொழுது நீங்கியுள்ளது.

நெடுந்தீவுக்குப் பிரயாணம் செய்வோர் தற்பொழுது எந்தவித தொல்லைகளுக்கும் உட்படாமல் பிரயாணத்தை மேற்கொள்வதோடு தினமும் இரண்டு தடவைகள் நெடுந்தீவுக்குப் போய்வரும் வாய்ப்பையும் பெற்றுள்ளனர்.

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் தனியார் மோட்டார்ப்படகுகளின் உதவியுடன் நெடுந்தீவு பிரதேச சபையினர் நடாத்தி வந்த மேலதிகப் பிரயாண சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் மேலதிக மோட்டார்ப் படகுச் சேவையினை வழங்க நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்வந்துள்ளது.

பெருந்தெருக்கள் திணைக்களத்தின் மேற்பார்வையிலுள்ள ''குமுதினி'' மோட்டார்ப் படகு தினமும் தனது பிரயாணத்தை நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு செய்து வருகின்றது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பிரயாணிகளின் வசதியைக் கருத்திற் கொண்டு உடனடியாகவே செயல் மேற்கொண்டமை குறித்துப் பிரயாணிகள் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றனர்.

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்ததுபோல் தினமும் மூன்று தடவைகள் மோட்டார்ப் படகுச் சேவைகளை நடாத்த சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## வில்லுப் பாட்டும் நாடகமும்

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை ஏழு மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக வில்லுப் பாட்டும், நாடகமும் இடம் பெற்றது. இந் நிகழ்ச்சியினை தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவினர் வழங்கினர்.


பல வருடகால சேவையில்

உன்னதமானதும், உயிர் ஊட்டும் சத்து நிரம்பியதும்

**தோலகட்டி நெல்லிரசம்**

வாங்கிப் பருகுங்கள்.

**தோலகட்டி ஆச்சிரமம்**

வசாவிளான்

குறிப்பு: போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள் மூடியைப்பார்த்து வாங்கவும் சிவப்பு மூடியிலான வெள்ளை மார்க் பதியப்பட்டுள்ளது.

மறவாதீர்கள்

**தோலகட்டி product ஆச்சிரமம்**

(B.294)

யாழ். நகர் வரும் சோர்வுற்ற பயணிகள் குறைந்த செலவில் நிறைந்த வசதிகளுடன் அமைதி மிக்க சூழ்நிலையில் பாதுகாப்பாகவும் அன்பான சூழ்நிலையில் நகரின் மத்தியில் தங்குவதற்கு நாட வேண்டிய சிறந்த இடம்.

**குமரன் ரூரிஸ்ட் இன்**

67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/ 311)

எம்மிடம், இரும்புப்பெட்டி, அலுவலக உபகரணங்கள்,

**டேட்டா செட்**
**(DATA SET)**
**உருக்குத் தளபாடங்கள்**
*(Steel Furniture)*

- எமது நிறுவனத்தின் உள்நாட்டுத் தயாரிப்பு.
- பல வருட அனுபவமும் செயற்றிறனும் சேர்ந்து உருவாக்கப்பட்டவை.
- மிக உயர்ந்த தரமும் அழகும் நிறைந்தவை.

உங்களுக்கு - உங்கள் அலுவலகத்துக்கு - உங்கள் வீட்டுப் பாவனைக்கு ஏற்ற அனைத்து உருக்குத் தளபாடங்கள்

வாட்றோப்ஸ் (Wardrobes) மேசைகள்
கபினேட் (Filing Cabinet) அலுமாரிகள்
காசுப்பெட்டிகள் (Cash Box)
மற்றும்

தங்கள் விருப்பத்திற்கும்
தேவைக்கும் ஏற்ற வகையில்

24 மணி நேரத்திற்குள் உங்களுக்கு கீழ் கண்டவற்றை ஓடருக்கு செய்து கொடுப்பதற்கு, காத்திருக்கிறார்கள்.

நூடில்ஸ், புரியாணி, சாப்பாட்டுப் பார்சல்கள், கோழி இறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, றால், நண்டு, பற்றிஸ், கட்லட், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள் நீங்கள் எடுத்துச் செல்வதற்கும் அங்கிருந்து உண்பதற்கும் சேவை செய்யக் காத்திருக்கின்றார்கள்.

**நியூ கிறீன் பீக்கிங் பலஸ்**

69, 4ஆம்குறுக்குத்தெரு
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

(B/295)

றபர்சீல், வீட்டுப் பெயர் பதித்தல், திறப்புக் கோர்வை, விலாசங்கள், பள்ளிக்கூடச் சின்னங்கள், மெழுகு சீல், மோட்டார் சயிக்கிள் நம்பர்கள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

**'மேவின்ஸ்'**

91/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B/297)

எம்மிடம் வார்ப்பு அலுமினியம், அலுமினியம் பிளாஸ்ரிக் எனாமல், எவர்சில்வர் மற்றும் பான்சி பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**ராஜா ரிரேட்ஸ் சென்ரர்**

இல-3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்:

(B/ 310)

ஈழநாத மடலுக்கு எமது அன்பு கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக!

குளிர்சாதனப் பெட்டிகள் சம்பந்தமான பழுது பார்க்கும் வேலைகள், மின்சார உபகரணம் சம்பந்தமான பொருட்களை பழுது பார்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.

**நோர்த் கூல் எஞ்ஜினியர்ஸ்**

இல. 250, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/305)

**APPRENTICE OF PHARMACIST**

Registration of Pharmacist (External)

Medical College Council

வெளிவாரி பாமஸிஸ்ட் பரீட்சைக்குரிய

சைவ உணவு நீங்கள் சாப்பிட்டுமகிழவும், நீங்கள் பார்சலாக வீட்டுக்கு கொண்டு போய் உண்ணவும் யாழ். நகரில் உங்களுக்கு சேவை செய்ய காத்திருக்கும்,

வெள்ளி

குமரன் ரூரிஸ்ட் இன்
67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(B/ 311)

எம்மிடம், இரும்புப்பெட்டி, அலுவலக உபகரணங்கள், எவர்சில்வர் பொருட்கள், பித்தளைச் சாமான்கள், அன்பளிப்புப் பொருட்கள், விளையாட்டுப் பரிசுப்பொருட்கள், கோவிலுக்குத் தேவையான பொருட்கள் முதலியன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

சிறி பத்மநாதா ஸ்ரோர்ஸ்
105, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.
B/313

உருவாக்கப்பட்டவை.
O மிக உயர்ந்த தரமும்
அழகும் நிறைந்தவை.

உங்களுக்கு - உங்கள் அலுவலகத்துக்கு -
உங்கள் வீட்டுப் பாவனைக்கு ஏற்ற அனைத்து
உருக்குத் தளபாடங்கள்
வாட்றோப்ஸ் (Wardrobes) மேசைகள்
கபினேட் (Filing Cabinet) அலுமாரிகள்
காசுப்பெட்டிகள் (Cash Box)
மற்றும்

தங்கள் விருப்பத்திற்கும்
தேவைக்கும் ஏற்ற வகையில்
தயாரித்து வழங்கப்படும்.

எமது காட்சி அறைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

ஒவிஸ் இகுயிப்மென்ற் லிமிட்டெட்
Office Equipment Ltd.

கிளை அலுவலகம்:
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(B-288)

இல-3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்:
(B/ 310)

APPRENTICE OF PHARMACIST

Registration of Pharmacist (External)
Medical College Council

வெளிவாரி பாமஸிஸ்ட் பரீட்சைக்குரிய
வகுப்புகள் இன்று முதல்
ஆரம்பம்: 19 - 03 - 1990

மாணவர்களின் நலன் கருதி
சனி, ஞாயிறு வகுப்புகள்

Cnotact:
Sayi Medical Acadamy
No: 10, Point Pedro Road,
JAFFNA.
(B/133)

யாழ்ப்பாணம்.
(B/305)

சைவ உணவு நீங்கள் சாப்பிட்டுமகிழவும், நீங்கள் பார்சலாக வீட்டுக்கு கொண்டு போய் உண்ணவும் யாழ். நகரில் உங்களுக்கு சேவை செய்ய காத்திருக்கும்,

வெள்ளி
விலாஸ்

இல.-- 288
கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(B/307)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

நிதான விலையில் தரமான பொருட்களுக்கு நாடுங்கள்

சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

எமது தயாரிப்பு : சுத்தமான தரமான நல்லெண்ணை

எமது சேவைகள் : நுகர்ச்சிப் பொருள் மொத்த சில்லறை விற்பனை, தரமான புடைவைகள்,
விவசாயப் பொருட்கள், கட்டிடப் பொருட்கள், கிராமிய வங்கி.

கூட்டுறவில் தளராத சேவையளிக்க தங்கள் ஒத்துழைப்பை நல்குங்கள்.

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(B/302)

### சிந்தனைக்கு

உண்மையை நேருக்கு நேர் சந்தி;
அரசியலில் அதுதான் சரியான வழி.
எந்நிலையிலும் சிறந்த பயனளிக்கும் மனநிலை.

- நிக்கலாய் லெனின்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 19 - 03 - 90

## நாற்பதாண்டு அரசியல்!

அரசியல் வாழ்வில் ஜனாதிபதி பிரேமதாசா கால் வைத்து இன்றுடன் நாற்பதாண்டுகள் நிறைவடைகிறதாம். இதையொட்டி இன மத வழிபாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொழிற்சங்கத் தலைவர் ஏ. ஈ. குணசிங்காவின் வழிகாட்டலில் சமூக சேவைகளில் இறங்கி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலீடுபட்டு கொழும்பு மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்டு அரசியல் வாழ்வில் இறங்கியவர் ஜனாதிபதி பிரேமதாசா.

இலங்கை அரசியல் விசித்திரமானது. சகல சமூகங்களின் ஆதரவையும் பெற்று 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் தேதி இலங்கை அரசியல் சுதந்திரம் பெற்றது.

இந்த சுதந்திரம் பெரும்பான்மைச் சமூகத்துக்கு மட்டுமே அனுபவிக்கக் கிடைத்ததென்ற மனப்பான்மையை சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் ஆரம்பத்திலேயே சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்துவிடத் தொடங்கினர்.

மலைநாட்டுத் தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமை இலங்கை சுதந்திரம் பெற்ற ஓர் ஆண்டிலேயே பறிக்கப்பட்டன.

பெரும்பான்மை ஜனநாயகம் என்பது சிறுபான்மைச் சமூகங்களை நசுக்குவதற்குப் பெரும்பான்மைச் சமூகத்துக்குக் கிடைத்த ஆயுதம் என்று சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் அர்த்தம் செய்தனர்.

சிங்களத் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட பதவிப் போட்டிகளும் ஆட்சிபீடத்துக்கு வருவதற்கு ஏற்பட்ட போட்டியும் குறுக்கு வழியில் இவற்றை அடைவதற்குத் திட்டம் தீட்ட வழி வகுத்தது.

# "இரத்தக் களரி என்பது இனி நடக்க முடியாதது"

--- ஸ்ரான்லி டோமினிக்

## நேரில் நிலைமைகளைப் பார்க்க வந்த பத்திரிகையாளர்களுடன் சந்திப்பு

எமது நல்லெண்ணத்துக்கு எதிராக தென்னிலங்கையில் இனவாதம் தலைதூக்குமானால் நாம் மற்றுமொரு யுத்தத்தையும் செய்யத் தயாராக உள்ளோம். இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் அமெரிக்க செய்தி நிறுவனம், ரைம்ஸ் பத்திரிகை ஆகியவற்றின் நிருபரான பற்றிக் குறூஸ்சிடம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் வாழும் மக்கள் அனுபவித்து வரும் கௌரவம், அடிப்படை உரிமைகள், சமூக பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றைத்தான் நாம் கேட்கிறோம். அதைவிட அதிகமாக ஒன்றும் நாம் கேட்கவில்லை. இந்திய இராணுவம் வடக்கு - கிழக்கு மாகாணங்களைவிட்டு அகன்ற பிறகு ஓர் இரத்தக் களரி ஏற்படும் என்பது வெறும் கதை.

★ இந்தியாவின் தாசர்கள், அவர்களுக்குச் சேவை செய்வதற்காக இந்தியாவுடன் சென்றுவிட்டார்கள். இனி அவர்களுடன் போர் செய்ய வேண்டிய அவசியமில்லை. எனவே, இரத்தக்களரி என்ற கதை 'வரலாறு' ஆகி விட்டது. - இவ்வாறு டொமினிக் யாழ்ப்பாணத் தலைமைச் செயலகத்தில் வைத்து பற்றிக் குறூஸ்சிடம் தெரிவித்தார்.

பற்றிக் குறூஸ் யாழ்ப்பாணம் பற்றிய தன் விவரணத்தைப் பின்வருமாறு நேற்றைய சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் எழுதுகிறார்.

புலிகளின் யாழ்ப்பாண தலைமைச் செயலகத்துக்கு முன்னால் உதவிகள் பெறுவதற்கும், சாதாரண பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், முறைப்பாடுகளைச் செய்வதற்காகவும் ... பட்டிருந்ததைப் பார்க்கக் கூடியதாகவிருந்தது.

ஒரு சிங்களவரின் வாகனம் (லொறி) ஒரு வாரத்தில் நான்குமுறை யாழ்ப்பாணம் வந்து போகிறது. அவர் கண்டியை விட இப்பொழுது யாழ்ப்பாணம் பாதுகாப்பான பிரதேசம் என்றார். அவர் தன்னுடைய பெயரை ஏனோ விளம்பரப்படுத்த விரும்பவில்லை.

தமிழ் ஈழத்துக்கான போராளிகளின் அரணாக விளங்கிய யாழ்ப்பாணம் இரு யுத்தங்களால் ஏற்பட்ட அழிவுகளின் பிறகு மறுபடியும் களை கட்டத் தொடங்கியுள்ளது.

யுத்தத்தின் வடுக்கள் எல்லோர் மனதிலும் பதிந்திருப்பதால், எவ்வாறாயினும் மற்றொரு யுத்தத்தைத் தவிர்க்க வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள்.

ஸ்ரான்லி டொமினிக், பற்றிக் குறூஸுக்கு அளிக்க பேட்டியின்போதுதொடர்ந்து கூறியதாவது:

எமது அன்னை பூமியில், இந்திய இராணுவத்தைக் கொண்டுவந்தவர்கள் தமிழர்கள் தான் என்ற கருத்தை எமது சிங்களச் சகோதரர்கள் மறந்திருப்பார்கள் என எண்ணுகிறேன். தமிழர்கள் இரக்தம் சிந்தித்தான் இந்திய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டினோம். சிங்களவர்கள் எம்மைச் சகோதரர்களாக ஏற்றுக் கொண்டு சண்டை சச்சரவு இல்லாமல் வாழ்வார்கள் என நம்புகிறோம்.

ஒரு கெரில்லா வீரனுக்குரிய ஆதங்கத்துடன் தாம் பலத்தை வைத்துக் கொண்டுதான் சமாதானம் பேசுவதாகவும் 'நாம் ...

இந்திய இராணுவம் காலக் கெடுவுக்குள் இலங்கையை விட்டுப் போய்விடும். ஆனால் அவர்கள் தமது ஒற்றர்களை விட்டுச் செல்ல மாட்டார்கள் என்பதை எம்மால் முற்றாக நிராகரிக்க முடியாது! அப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால், அதைச் சமாளிக்கவும் நாம் தயாராகவுள்ளோம் என்றார்.

பத்திரிகையாளர், பற்றிக் குறூஸ் பின்வருமாறு தனது யாழ்ப்பாணம் பற்றிய விவரணத்தைத் தொடர்கிறார்.

பலாலியிலும் காங்கேசன் துறையிலும் கப்பல்கள் கடலில் அசைவதையும், விமானங்கள் பறப்பதையும் அவதானிக்க முடிந்தது.

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமாக 1000 தொன் நிறையுள்ள கப்பல்கள் நாளொன்றுக்கு மூன்று முறை காங்கேசன்துறையிலிருந்து இந்தியா போவதாகக் காங்கேசன்துறைத் துறைமுகத்தைப் பாரமரிக்கும் லங்கா சீமெந்து லிமிட் அதிகாரிகள் கூறினார்கள். ''இந்தியர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள் அடுத்த வாரமளவில் துறைமுகம் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும்'' என்றார் லங்கா சீமெந்து லிமிற்ரட் அதிகாரி ஒருவர். அவர் தன்னை இனம் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

பலாலியில் பாரிய போக்குவரத்து விமானங்களில் கவச வாகனங்கள், கனரக லொறிகள், இராணுவ உபகரணங்கள் எல்லாம் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன.

சடந்த இரண்டு மாதங்களாக பலாலியிலிருந்து இந்தியா செல்லும் விமானச் சேவை அதிகரித்துள்ளதாக ...

## அன்னை பூபதி தியாக தினம்

(மட்டக்களப்பு)

உலகில் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த முதலாவது பெண்மணியான அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் ஈராண்டு நினைவு தினம் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய எட்டு மாவட்டங்களிலும், அவர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த தினமான இன்று 19 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் அவர் உயிர்நீத்த தினமான எப்ரல் 19 ஆம் திகதி வரையும் ''தியாக தினமாக'' அனுஷ்டிப்பதற்கான விரிவான ஏற்பாடுகளை, அன்னை பூபதி நினைவுப் பணிமன்றம் மேற்கொண்டுள்ளது.

பாடசாலை மாணவர் அமைப்புகள், கிழக்குப் பல்கலைக் கழக, யாழ் பல்கலைக் கழக அமைப்புகள் மற்றும் பொது ஸ்தாபனங்கள், வர்த்தக சங்கங்கள், மட்டக்களப்பு மாவட்டத் தொழிற்சங்கச் சம்மேளனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் அன்னை பூபதி நினைவுப் பணிமன்றம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

ஒரு மாத காலத்திற்கு அடையாள உண்ணாவிரதங்கள், விசேட பூசைகள், அன்ன தானங்கள், சிரமதானங்கள் என்பன தொடர்ச்சியாக நடாத்தப்படும்.

ஏப்ரல் 19 ஆம் திகதி இறுதி நாள் மட்டக்களப்பு கல்லடியில் அமைக்கப்பட்டுள்ள அன்னை பூபதி நினைவுத் தூபி திறப்பு விழாவும், பொதுக்கூட்டமும் நடைபெறும்.

இந்திய இராணுவம் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டும், விடுதலைப் புலிகளுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும், ஈழத் தமிழினத்தை அழிக்கும் நடவடிக்கைகளை இந்தியா உடன் நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அன்னை பூபதி கணபதிப்பிள்ளை மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் 19-03-88 இல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

ஒரு மாத காலம் தனது கோரிக்கைகளை வலியுறுத்தித் தொடர்ச்சியாக உண்ணாவிரதமிருந்த அன்னை பூபதியின் கோரிக்கைகளை, தமிழினத்தின் கோரிக்கைகளை இந்தியா உதாசீனம் செய்ததால் 19-04-88 இல் உயிர் ...

## ஊர்சுற்றி

எழுதுவது

ஆரியகுளம் சந்திக்கருகே தோண்டப்பட்ட குழிபற்றி சென்ற சனிக்கிழமைப் பத்திரிகையில் எழுதியிருந்தேனல்லவா?

சனிக்கிழமை மாலைக்குள்ளாகவே அந்தக் குழி மூடப்பட்டு அதன் மேல் பெரிய கற்களும் போடப்பட்டிருந்தன. அது மட்டுமல்ல இந்த இடத்தில் மிகப் பிரகாசமான மின்வெளிச்சமும்போடப்பட்டிருந்தது.

அந்த ஓவசியருக்கு ஒரு சபாஷ் போடலாமா?

★ ★ ★

இப்பொழுது யாழ் நகரில் பல வீதிகளிலும் வீதிகள் செப்பனிடப்படுகின்றன. நேற்று ஞாயிற்றுக்கிழமையும் இந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மக்கள் மனதில் பெரும் நிம்மதியும் சந்தோஷமும் மீண்டும் ஏற்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இரவு ஒன்பது மணிக்குத் திரைப்படம் பார்த்து விட்டு மக்கள் உல்லாசமாகச் செல்கிறார்கள். புத்தக வெளியீடுகள், இலக்கியக் கூட்டங்களும் நடைபெறுகின்றன. இரவு பத்துப் பதினொரு மணிவரை வீதிகளில் சன நடமாட்டம் அதிகமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. குழந்தைகளுடன் குடும்பமே மோட்டார் சைக்கிளில் இரவில் உறவினர் வீடுகளுக்கு விசிட் செய்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது இப்படியொரு மாற்றம் இவ்வளவு விரைவாக வருமென்று யார் எதிர்பார்த்தார்கள்?.

நாட்டில் எப்போது உண்மையான அமைதி ஏற்படும்?

சுமார் ஐந்தாறு மாதங்களுக்குமுன் நாலைந்து நண்பர்கள் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த ...

இந்த சுதந்திரம் பெரும்பான்மைச் சமூகத்துக்கு மட்டுமே அனுபவிக்கக் கிடைத்ததென்ற மனப்பான்மையை சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் ஆரம்பத்திலேயே சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்துவிடத் தொடங்கினர்.

மலைநாட்டுத் தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமை இலங்கை சுதந்திரம் பெற்ற ஓர் ஆண்டிலேயே பறிக்கப்பட்டன.

பெரும்பான்மை ஜனநாயகம் என்பது சிறுபான்மைச் சமூகங்களை நசுக்குவதற்குப் பெரும்பான்மைச் சமூகத்துக்குக் கிடைத்த ஆயுதம் என்று சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் அர்த்தம் செய்தனர்.

சிங்களத் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட பதவிப் போட்டிகளும் ஆட்சிபீடத்துக்கு வருவதற்கு ஏற்பட்ட போட்டியும் குறுக்கு வழியில் இவற்றை அடைவதற்குத் திட்டம் தீட்ட வழி வகுத்தது.

முதலில் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளரின் குடியுரிமை வாக்குரிமைகளைப் பறித்துச் சுவை கண்ட சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் பின்னர் தமிழ் மக்களின் மொழியுரிமையைப் பறிப்பதில் போட்டி போட்டு நின்றனர்.

சிங்களத் தலைவர்களின் வகுப்பு வாதத்துக்கு தேசிய வாதம் என்று வியாக்கியானம் செய்யப்பட்டது. தமிழர்கள் தமது உரிமைகளைப் பறிக்கக் கூடாதென்று குரல் கொடுத்து அவற்றைப் பாதுகாக்க முனைந்த போது அதற்கு வகுப்பு வாதம் என்று அர்த்தம் கொடுக்கப்பட்டது.

இதனால் தமிழர்களின் உரிமைகளைப் பறிக்க வேண்டுமென்று எவர் உச்சத்தில் குரல் கொடுக்கிறாரோ அவரே 'தேசிய வாதி' என்ற கருத்தை ஏற்படுத்தி வகுப்பு வாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டுப் பதவிக்கு வருவதில் சிங்கள அரசியல்வாதிகள் முனைந்து நின்றனர்.

இந்தப் போட்டியில் பிரேமதாசாவும் சளைக்கவில்லை.

வகுப்புவாதத்தைக் கிளப்பிப் பதவிக்கு வந்தவர்கள் பின்னர் பட்ட அவலங்களையும் அவர்கள் கண்ட பயனையும் இப்பொழுது பிரேமதாசா நன்குணர்ந்து கொண்டுள்ளார் போல் தெரிகின்றது.

இதனால்தான் அவர் இப்பொழுது தேசிய ஒருமைப்பாடு, இன ஒற்றுமை, சாந்தி சமாதானம் என்று சொல்லிச் செயலிலும் காட்டுவதற்கு முயற்சி செய்வதாகத் தோன்றுகிறது.

பிரேமதாசாவின் இன்றைய போக்கு மனப் பூர்வமானதாகவே தோன்றுகிறது.

அடிமட்டத்திலிருந்து அரசியலுக்கு வந்தவர்; நாற்பதாண்டுகள் சகல நிலையிலும் அனுபவப்பட்டவர்; வெறும் மூளைப் பலத்தை மட்டும் நம்பியிராதவர்.

இன்று பின்பற்றும் இலட்சியத்தைத் தொடர்ந்தும் விசுவாசமாக நிலை நாட்டுவதற்கு உழைப்பதில்தான் பிரேமதாசாவின் வெற்றி தங்கியுள்ளது.

அவர்களுக்குச் சேவை செய்வதற்காக இந்தியாவுடன் சென்றுவிட்டார்கள். இனி அவர்களுடன் போர் செய்ய வேண்டிய அவசியமில்லை. எனவே, இரத்தக்களரி என்ற கதை 'வரலாறு' ஆகி விட்டது. - இவ்வாறு டொமினிக் யாழ்ப்பாணத் தலைமைச் செயலகத்தில் வைத்து பற்றிக் குறூஸிடம் தெரிவித்தார்.

பற்றிக் குறூஸ் யாழ்ப்பாணம் பற்றிய தன் விவரணத்தைப் பின்வருமாறு நேற்றைய சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் எழுதுகிறார்.

புலிகளின் யாழ்ப்பாண தலைமைச் செயலகத்துக்கு முன்னால் உதவிகள் பெறுவதற்கும், சாதாரண பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், முறைப்பாடுகளைச் செய்வதற்காகவும் நூற்றுக் கணக்கானோர் கூடி நிற்கின்றனர்.

உற்பத்திப் பண்டங்களின் மொத்த வியாபார மையமாக முன்பு விளங்கிய யாழ்ப்பாணம் மறுபடியும் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

தென்னிலங்கையின் மூலை முடுக்குகளிலிருந்தும், மலைநாட்டிலிருந்தும் சிங்களச் சாரதிகள் ஓட்டிவந்த லொறிகள் வியாபாரத்தில் ஈடு...

...றிக் குறூஸுக்கு அளிக்க பேட்டியின்போது தொடர்ந்து கூறியதாவது:

எமது அன்னை பூமியில், இந்திய இராணுவத்தைக் கொண்டுவந்தவர்கள் தமிழர்கள் தான் என்ற கருத்தை எமது சிங்களச் சகோதரர்கள் மறந்திருப்பார்கள் என எண்ணுகிறேன். தமிழர்கள் இரத்தம் சிந்தித்தான் இந்திய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டினோம். சிங்களவர்கள் எம்மைச் சகோதரர்களாக ஏற்றுக் கொண்டு சண்டை சச்சரவு இல்லாமல் வாழ்வார்கள் என நம்புகிறோம்.

ஒரு கெரில்லா வீரனுக்குரிய ஆதங்கத்துடன் தாம் பலத்தை வைத்துக் கொண்டுதான் சமாதானம் பேசுவதாகவும் 'நாம் பலவீனர்களாக இருந்தால் எம்மை நசுக்கி விடுவார்கள்' என்றார் ஸ்ரான்லி டொமினிக்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் ஜனாதிபதி பிரேமதாஸாவில் நம்பிக்கை கொண்டுள்ளோம். அவர் எமது பிரச்சினையைத் தீர்த்து வைக்க விரும்புகிறார் என்பதை நாம் நம்புகிறோம்.

## ஒரு பெண்ணின் கவலை இது

(மானிப்பாய்)

கடந்த 22 வருடங்களாக எனது கணவர் சுகாதார இலாகாவில் கடமையாற்றுகின்றார். இவர் நாட்டின் பல பகுதிகளில் முக்கியமாக தென்பகுதிகளில் கடமையாற்றிவிட்டு கடந்த 8 வருடங்களுக்கு மேல் மட்டக்களப்பில் கடமையாற்றி வருகின்றார். இதுவரையில் எனது கணவர் சொந்த ஊரிலோ அல்லது அதற்கு அண்மையிலோ கடமையாற்றவில்லை.

1989 இன் மத்தியிலும் வழமைபோல் வருடாந்த இடமாற்றத்திற்காக விண்ணப்பங்கள் மாகாண சுகாதார இலாகாவால் கோரப்பட்டன. எனது கணவர் இந்தமுறை இடமாற்றம் உறுதியாகக் கிடைக்கும் என எண்ணியிருந்தார். ஏனெனில் இடமாற்றத்துக்குத் தேவையான எல்லாத் தகைமைகளும் இவருக்கு இருக்கின்றன.

மாகாண சபைக்குக் கீழ் உள்ள அநேகமான திணைக்கள ஊழியர்கள் இடமாற்றத்தைப் பெற்று விட்டார்கள். ஆனால் சுகாதாரத் திணைக்களம் மட்டும் இன்னமும் தனது ஊழியர்களுக்கு இடமாற்றம் செய்யவில்லை. இதற்குக் காரணம் என்ன? சுகாதார திணைக்களத்திற்கும் Public Service Commission...... இற்கும் இழுபறி என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் இழுபறி எப்போது முடிவுறும்? எப்போது என் கணவரைப் போல் அல்லல் படுகிறவர்கள் துயரம் முடிவுறும்?

## மக்கள் மடல்

இவர் குடும்பத்தில் முக்கிய அங்கத்தவராக இருந்தும் பல முக்கிய விடயங்களுக்கு எனது கணவருடைய சேவை கடந்த 20 வருடங்களுக்கு மேலாக எமக்கு கிட்டவில்லை. அத்தோடு வாழ்க்கைப்படி உயர்வினாலும் சம்பளம் போதாமையாலும் எமக்கு ஓர் சொந்த வீடேனும் கட்டமுடியாத நிலையில் உள்ளோம்.

- ச. சுகிர்தராணி

...தைப் பராமரிக்கும் லங்கா சீமெந்து லிமிட் அதிகாரிகள் கூறினார்கள். ''இந்தியர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள் அடுத்த வாரமளவில் துறைமுகம் எமது கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும்'' என்றார் லங்கா சீமெந்து லிமிற்ரட் அதிகாரி ஒருவர். அவர் தன்னை இனம் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

பலாலியில் பாரிய போக்குவரத்து விமானங்களில் கவச வாகனங்கள், கனரக லொறிகள், இராணுவ உபகரணங்கள் எல்லாம் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன.

கடந்த இரண்டு மாதங்களாக பலாலியிலிருந்து இந்தியா செல்லும் விமானச் சேவை அதிகரித்துள்ளதாக இலங்கை விமானப் படை அதிகாரி ஒருவர் என்னிடம் தெரிவித்தார். கனரக வாகனங்களையும், கவச வாகனங்களையும் ஏற்றுவதற்குத் தாமதமாகலாமென்றும், எப்படியாவது இந்த மாத முடிவுக்குள் அவர்கள் போய்விடுவார்கள் என்றும் அந்த விமானப் படை அதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கரையோரங்களில் இந்திய இராணுவத்தின் நான்கு முகாம்கள் மட்டுமே மிஞ்சியுள்ளன. அவையும் ஒன்றன் பின் ஒன்றாக மூடப்பட்டுவிடும்.

நாட்டை விட்டு வெளியேறும் இந்திய இராணுவத்தைத் தாம் தாக்கப் போவதில்லை என்று விடுதலைப் புலிகள் உறுதிமொழி தந்திருந்தும், நம்பிக்கையில்லாமல் இந்தியச் சிப்பாய்கள் ஒரு வகையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்று இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் என்னிடம் பலாலியில் தெரிவித்தார்.

வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகள் அமைப்பில் பெண்கள் பிரிவு ஒன்று இயங்குகிறது. அவர்களிடம் T-56 இன் திருந்திய வடிவமும், சீனாவில் தயாரித்ததுமான T-81 றைபிள்கள் உள்ளன. பெண் விடுதலைப் புலிகளின் தலைமைக் காரியாலயம் திருநெல்வேலியில் அமைந்துள்ளது. லெப். இமல்டா பெண் விடுதலைப் புலிகளைத் தலைமை தாங்கி வழி நடத்துகிறார். இவர்களில் தாரணி என்ற இராணுவப் பெயரில் அழைக்கப்படும் சிங்கள பெண்ணையும் சந்தித்தேன். பெண் விடுதலைப் புலிகளிடம் இந்திய இராணுவத்திடம் கைப்பற்றிய வாகனங்கள் இருந்தன. அவர்கள் காவல் நிலையங்களில் காவல் புரிகிறார்கள். 24 மணிநேரம் சுழற்சி முறையில் சேவை செய்து வாகனங்களையும் சோதனையிடுகிறார்கள். பெண் விடுதலைப் புலிகளின் சராசரி வயது 16 — 27 க்குமிடையில் இருக்கலாம். இவர்களுக்கான ஒழுக்க விதிகளின் படி, இவர்கள் நகைகள் அணியக் கூடாது. கழுத்திலும் ஒரு சயினேட் குப்பிக்குப் பதிலாக இரண்டு குப்பிகள் தொங்குகின்றன.

...தலையற்ற யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டும், விடுதலைப் புலிகளுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும், ஈழத் தமிழினத்தை அழிக்கும் நடவடிக்கைகளை இந்தியா உடன் நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அன்னை பூபதி கணபதிப்பிள்ளை மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் 19-03-88 இல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

ஒரு மாத காலம் தனது கோரிக்கைகளை வலியுறுத்தித் தொடர்ச்சியாக உண்ணாவிரதமிருந்த அன்னை பூபதியின் கோரிக்கைகளை, தமிழினத்தின் கோரிக்கைகளை இந்தியா உதாசீனம் செய்ததால் 19-04-88 இல் உயிர் நீந்தார். (39)

## பெற்றோரின் பங்கு

(விசேட நிருபர்)

''போதைப் பொருள் பாவிக்கும் பெற்றோர் தங்களது பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி அதிலிருந்து விடுபட வேண்டும். பாடசாலை தான் கல்விக்கு உரிய இடம் என்ற நியதி இல்லாமல் வீட்டில் அமைதிநிலவ பெற்றோர் நினைத்தால் அதனையே போதனாசாலையாக்க முடியும்''

இவ்வாறு குருநகர் சென். யேம்ஸ் மகாவித்தியாலய பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. அ. ஸ்ரனிஸ்லோஸ் குறிப்பிட்டார்.

அதிபர் திரு. ஸ்ரனிஸ்லோஸ் தொடர்ந்து பேசுகையில்:

'' உங்கள் பிள்ளைகள் செல்லும் இடம், யாருடன் பழகுகிறார்கள், வீட்டுப்பாடங்களைப் படிக்கிறார்களா என்பவற்றை அவதானியுங்கள். விளையாட்டு, கலை யார்வம், சாரணியம் போன்றவற்றில் பிள்ளைகளின் கவனத்தை வளர்த்து அவர்கள் தமது சொந்த சிந்தனையில் வாழ வழியமைக்க வேண்டியது பெற்றாரின் பொறுப்பு ஆகும்-'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆசிரியை திருமதி பி. ஞானப்பிரகாசம் நன்றி கூறினார். (21)

...அதிகமாகக் காணக்கூடியதாக இருக்கிறது. குழந்தைகளுடன் குடும்பமே மோட்டார் சைக்கிளில் இரவில் உறவினர் வீடுகளுக்கு விசிட் செய்கிறது இவற்றையெல்லாம் பார்க்கும் போது இப்படியொரு மாற்றம் இவ்வளவு விரைவாக வருமென்று யார் எதிர்பார்த்தார்கள்?.

நாட்டில் எப்போது உண்மையான அமைதி ஏற்படும்?

சுமார் ஐந்தாறு மாதங்களுக்குமுன் நாலைந்து நண்பர்கள் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த போது ஒருவர் மேற்கண்ட கேள்வியை எழுப்பினார். இதற்கு ஒரு அச்சகப் பொறுப்பாளரான நண்பர் சொன்னார்.

'' வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள எனது உறவினர்களுக்கும் வல்வெட்டித்துறைப் பகுதியிலுள்ள என் மனைவியின் உறவினர்களுக்கும் மறுநாள் காலையில் யாழ். நகரிலுள்ள என் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு திடீர் வைபவத்தில் கலந்து கொள்ள வருமாறு முதல் நாளிரவு நான் சென்று தகவல் கொடுத்துவிட்டு அந்த இரவே நான் வீடு திரும்பக்கூடிய சூழ்நிலை எப்பொழுது ஏற்படுகிறதோ அன்றுதான் உண்மையான அமைதி என்று சொல்வேன் '' என்று சொன்னார்.

இன்று அந்த நிலை ஏற்பட்டுவிட்டதென்று சொன்னால் தவறா?

★

## வடமராட்சியில் கசிப்பு உற்பத்தி

(கரவெட்டி)

வடமராட்சிப் பகுதிகளில் தற்பொழுது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனவு அதிகரித்துக் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

இதனால் இப்பகுதிகளில் சட்டம் ஒழுங்கு நடவடிக்கை மிகவும் மோசமடைந்து வருவதனால் குடியிருப்பாளர்கள் மிகவும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருவதனையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது (18)

ஈழநாதம்

# "வந்த நோக்கத்தை இந்திய அமைதிப்படை முடிக்கவில்லை"

## -ஜனாதிபதி பிரேமதாசா



(ஆனமடுவ)

வடக்கு - கிழக்கில் ஆயுதப் போராட்டத்தை அடக்குவதற்கே இந்தியப் படையினர் இங்கு வந்தனர். ஆனால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணி சரிவர நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ நேற்று இங்கு நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய ஜனாதிபதி,

வெளிநாட்டுப் படையினர் இங்கிருப்பதை ஆரம்பமுதலே நான் எதிர்த்து வந்தேன். அமைதி காக்க வந்த படையினர் தாக்குதலுக்கு இலக்காகினர். வடக்கிலும் கிழக்கிலும் ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகினர்.

நான் பதவி ஏற்றதும் இதனை மாற்ற விரும்பினேன் தேர்தலின்போதும் இதனைக் கூறினேன். இந்தியப்படை வெளியேறுவதால் தீவிரவாதிகளுடன் நல்லெண்ணத்தை வளர்க்க முடியும். இதனால் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த முடிந்தது.

நம்மிடையே பேதங்கள் இருந்தால் வெளிநாட்டு சக்திகள் தலையிட வாய்ப்புண்டு. முன்னரும் போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் இங்கு ஊடுருவ நமது ஒற்றுமையின்மையே காரணமாகும்.

வடக்கு-கிழக்கு பற்றி குறிப்பிட்ட ஜனாதிபதி கடந்த காலச் சம்பவங்கள் புகட்டிய பாடங்களைக் கொண்டு நமது பிரச்சனைகளை சகோதரத்துவ உணர்வுடன் நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும் இதனாலேயே விடுதலைப் புலிகளும் அரசும் பேச்சு நடத்துகிறது. என்றார்.

விடுதலைப்புலிகள் தற்போது சரியான கண்ணோட்டத்தில் செயற்படுகிறது. நான் பதவியேற்றதையடுத்து அவர்களுக்கு பேச்சுவார்த்தையில் நம்பிக்கையுண்டு என்றும் ஜனாதிபதி கூறினார்.

# ஐப்பானில் தீ விபத்தில் பதினாறு பேர் மரணம்!

(டோக்கியோ)

மேற்கு ஜப்பானில் ஐந்து மாடிகளைக்கொண்ட ஒரு கடைத்தொகுதியில் நேற்று ஏற்பட்ட பாரிய தீவிபத்தின் காரணமாக குறைந்த பட்சம் பதினாறு பேர் உயிரிழந்தார்கள். அத்துடன் மேலும் பலர் காயமடைந்ததாகத் தெரியவருகின்றது.

அமகாசுகி நகரத்திலுள்ள நவீன சந்தையின் நான்காவது மாடியில் நேற்று பிற்பகல் ஏற்பட்ட இந்தத் தீ, நான்கு மணித்தியாலயத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டது. இந்த நவீன சந்தைக்குள் பெருந்தொகையான மக்கள் இருந்ததாகத் நம்பப்படுகின்றது. எனினும் இதுவரை பதினாறு பேர் உயிரிழந்ததாக ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அங்கு வேலை செய்து கொண்டிருந்த கடைச் சிற்பந்திகள் பதினொரு பேரின் விபரங்கள் இதுவரை தெரிவில்லை. எனவே உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படலாம் என எண்ணப்படுகின்றது. இந்த விபரத்திற்கான காரணம் பற்றிய விசாரணை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# நினைவஞ்சலிக் கூட்டம்

(தீவுப்பகுதி)

காரைநகரைச் சேர்ந்தவரும் விடுதலைப் போரில் வீர மரணமடைந்த பெண் போராளி யோகராணி ஹெலன் (அனுஷியா) அவர்களின் இரண்டாதுவஆண்டுநினைவஞ்சலிவைபவமும், நிவனவு தூபி திறப்பு விழாவும் காரைநகர் ஆலடிச் சந்தியில் நடைபெற்றது. ஹெலனின் தாயார் குத்து விளக்கேற்றி வைக்க தந்தையார் நினைவு தூபிக்கு மலர் மாலை அணிவித்தார். விடுதலைப் புலிகளின் மகளிர் அணியைச் சேர்ந்த செல்வி. சோதியா ஹெலனின் அனுபவங்கள், பெண்களின் விடுதலைப் போராட்ட பங்களிப்பு என்பனபற்றி எடுத்துக் கூறினார். விடுதலைப் புலிகளின் நிர்வாக அரசியல் பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோ அங்கு உரையாற்றுகையில் எமது போராளிகளின் தியாகத்தாலும் அவர்கள் சிந்திய குருதியாலும் மக்களின் எழுற்சிமிக்க போராட்டத்தாலுமே எமக்கு விடிவு தோன்றும் நிலை உருவாக்கியுள்ளது என்றார்.

(15)

## அரச உயர் அதிகாரிகளுக்கு

# 5 வருடங்களால் வாகனங்கள் சொந்தமாக்க அரசு திட்டம்

(கொழும்பு)

அரசாங்க அதிகாரிகள் இனிமேல் தமக்கு வழங்கப்பட்ட வாகனங்களை ஐந்து வருடங்களால் தமதாக்கிக் கொள்ள முடியும்,

இதன்படி அவர் பாவித்த பின்பு, ஐந்து வருடங்களினால் அந்த வாகனத்தின் பெறுமதியில் பத்து சதவீதத் தொகையை மட்டுமே அவர் அரசுக்குச் செலுத்த வேண்டும்.

இது குறித்து பொது நிர்வாக அமைச்சு திட்டமும் தயாரித்துள்ளது.

அவர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஓய்வு பெறுவதானால் செலுத்த வேண்டிய தொகையும் அதைவிடக் கூடுதலாகும்.

ஒரு வருடத்தில் ஓய்வுபெறுவதானால் வாகனப் பெறுமதியில் 85 சதவீதம் செலுத்த வேண்டும்.

இதே போல இரண்டு வருடங்களில் வாகனப் பெறுமதியீல் 67 சதவீதத்தையும், 3 வருடங்களில் 48 சதவீதத்தையும், 4 வருடங்களில் 26 சதவீதத்தையும் செலுத்த வேண்டும்.

குறைந்தது மூன்று வருடங்களாவது வாகனம் உத்தியோக பூர்வ பணிகளுக்காக உபயோகிக்கப்பட வேண்டும். அத்துடன் அவர் 57 வயதுக்குக் குறைந்தும் இருக்க வேண்டும்.

உத்தியோகபூர்வ காலத்தில் இவரது பாவனைக்கு 1320 கிலோ மீற்றர் தூரம் செல்ல இலவசமாக எரிபொருள் வழங்கப்படும்.

# மருந்துவகை விநியோகம்

(தீவுப்பகுதி)

வேலணை கிராமிய ஆஸ்பத்திரி, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றிற்குத் தேவையான மருந்துவகைகளை சுகாதாரத் திணைக்களம் தற்போது அனுப்பி வைத்துள்ளது. சில மாதங்களாக ஆஸ்பத்திரிகளில் மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடுகள் நிலவியது குறிப்பிடத்தக்கது.

# பொதுக் கூட்டம்

(கோப்பாய்)

இன்று மாலை 7.30 மணிக்கு கோப்பாய் வடக்கு பலானை அம்மன் கோயில் முன்றலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பொதுக் கூட்டம் நடை பெறும். அத்துடன் கலாச்சாரப் பிரிவின் ''நடந்து வந்த பாதை'' என்னும் பொருள் பற்றிய வில்லிசையும் விடிவை நோக்கி'' என்ற நடாசமும் நடைபெறும்.

# எட்டு மாதம்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுத்த பின் தாங்களும் தஞ்சம் கொடுக்காமல் விடுவது மனிதாபிமானமற்ற செயலாகுமென்றும் கூறினார்.

இந்த அகதிகளுக்கென முதற் கட்டமாகப் பத்து லட்சம் ரூபாயை இந்திய மத்திய அரசு வழங்கியிருப்பது தெரிந்ததே.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கலாசார உத்தியோகத்தர் தேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கலாசார நடவடிக்கைகளை விரிவுபடுத்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் கலாசார உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்

இரா. நாகலிங்கம் தலைமையில் கூடிய கலாசார பேரவையில் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கடந்த பல வருடங்களாக மந்த நிலையில் உள்ள கலாசார, இலக்கிய நடவடிக்கைகளை புனரமைக்க வேண்டுமெனவும்,

# தேவிலால் ராஜினாமா வாபஸ் வி.பி.சிங் அரசின் நெருக்கடி தணிவு

(புது டல்லி)

இந்தியாவின் துணைப் பிரதமர் தேவிலால் தொடர்ந்து அந்தப் பதவியை நீடிப்பார். இவரது ராஜினமாக் கடிதத்தால் தேசிய முன்னணி அரசுக்கு ஏற்பட்ட நெருக்கம் சுமுகமாக தீர்ந்துவிட்டது.

பிரதம மந்திரி வி. பி. சிங் தேவிலாலின் ராஜினமாவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதுஎன்று உரிமையோடு கடிதம் எழுதியதை அடுத்தும். தேசிய முன்னணித் தலைவர் என். டி. ராமராவ் உட்பட பல தலைவர்கள் மேற்கொண்ட முயற்சியாலும், கூட்டணிக் கட்சிகளான பாரதீய ஜனதாக் கட்சி, மாக்சிய கம்யூனிச கட்சி. இந்திய கம்யூனிசக் கட்சி ஆகியவற்றின் அறிவுரைப்படியும் கடந்த மூன்று நாட்களாக மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்திய இப்பிரச்சினை தீர்ந்துபோனது.

பிரதமர் வி. பி. சிங் துணைப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தேவிலால் கட்சிக் கட்டுமாணத்திற்கு அடித்தளமாக இருப்பதையும் மத்தியின் தேசிய முன்னணி அரசு உருவாக பிரதமராக இருந்ததையும் சுட்டிக் காட்டினார். இதனால் அவர் பதவி விலகல் வற்புறுத்தக் கூடாது என்று கேட்டுக் கொண்டார். தேவிலாலும் இதற்கு உடன்பட்டுள்ளார்.

இதற்கு முன்பாக புதுடெல்லியில் பாராளுமன்ற செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதற்குப் பிறகு முதலமைச்சர்களும், சில மத்திய அமைச்சரும் இவருடன் பேசினார்கள். இதற்கிடையில் என். டி. ராமராவ் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று தெரிவித்ததோடு குடும்பப் பிரச்சினையோடு சம்பந்தப் பட்டதென்றும், அதில் உடன்பாடு காணப்

# மீண்டும் . . .

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

சட்டத்தையும், ஒழுங்கையும் வழங்க முடியவில்லை. 6000 அப்பாவி மக்களைக் கொன்றுகுவித்தார்கள். இந்திய இராணுவம் வெளியேறியதும் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட வேண்டும். விடுதலைப் புலிகளால் வழமையான வாழ்க்கையையும், சட்டத்தையும் ஒழுங்கையும் மக்களுக்கு மறுபடியும் வழங்க முடிந்தது என்றார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் இன்று இடைக்கால மாகாண அரசு பற்றி அரசாங்கத்துடன்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். இவ் விடயத்தில் மாகாணப் பொலிஸ் படைக்கு ஆட்சேர்க்கும் வேலைகள் ஆரம்பமாகி விட்டன. மாகாணப் பொலிஸ் படை ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது.

# யாழ். நகர.....

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

வீதி (சுப்பையா கடையிலிருந்து வின்சர் தியேட்டர் வரையான பகுதி)யில் இரண்டு சக்கர வண்டி மட்டும் அனுமதிக்கப்படும் ஏனைய பெரிய வாகனங்கள் எவையும் அனுமதிக்கப்படமாட்டாது யாழ். நகரை நோக்கி காங்கேசன் துறை பகுதியிலிருந்து வரும் தனியார் போக்குவரத்து பஸ்கள் வைத்தீஸ்வரா சந்தி, ஸ்ரான்லி வீதி ஆரிய குளம் சந்திவழியாக பலாலி ரோட் வந்து ஆஸ்பத்திரிவீதி வழியாக நகருக்குள் செல்ல உத்தரவிடப்படும்.

நகருக்குள் இருந்து மின்சாரநிலையவீதி வெலிங்டன் சந்தி வழியாக நகரை விட்டு வெளியேறலாம்.

அதேவேளை மினிபஸ்கவிர்ந்த தனியார் வாகனங்கள் கண்ணாதிட்டி வீதி, கஸ்தூரியார் வீதி, ஆரியகுளம் சந்தி வழியாலும் வெலிங்டன் சந்தி விகடோரியா வீதிவழியாகவும் நகருக்குள் பிரவேசிக்கலாம்.

இவையனைத்தும் முட்

பெறுமதியில் பத்து சதவீதத் தொகையை மட்டுமே அவர் அரசுக்குச் செலுத்த வேண்டும்.

இது குறித்து பொது நிர்வாக அமைச்சு திட்டமும் தயாரித்துள்ளது.

அவர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஓய்வு பெறுவதானால் செலுத்த வேண்டிய தொகையும் அதைவிடக் கூடுதலாகும்.

ஒரு வருடத்தில் ஓய்வுபெறுவதானால் வாகனப் பெறுமதியில் 85 சதவீதம் செலுத்த வேண்டும்.

இதே போல இரண்டு வருடங்களில் வாகனப் பெறுமதியில் 67 சதவீதத்தையும், 3 வருடங்களில் 48 சதவீதத்தையும், 4 வருடங்களில் 26

உத்தியோகபூர்வ காலத்தில் இவரது பாவனைக்கு 1320 கிலோ மீற்றர் தூரம் செல்ல இலவசமாக எரிபொருள் வழங்கப்படும்.

## மருந்துவகை விநியோகம்

(தீவுப்பகுதி)

வேலணை கிராமிய ஆஸ்பத்திரி, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றிற்குத் தேவையான மருந்துவகைகளை சுகாதாரத் திணைக்களம் தற்போது அனுப்பி வைத்துள்ளது. சில மாதங்களாக ஆஸ்பத்திரிகளில் மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடுகள் நிலவியது குறிப்பிடத்தக்கது.

# எமது நோக்கம் தேர்தல்ல்ல மண், மக்களது பாதுகாப்பே

--- நரேஸ்

(தீவுப்பகுதி)

எமது நோக்கம்தேர்தலல்ல எமது மண், எமது மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். எமது மக்களுக்கு நிரந்தர அமைதி கிடைக்கும் வரை எமது குறிக்கோளில் எவ்வித மாற்றமுமில்லை. எமது போராட்டம் முன்னெடுத்துச் செல்வதற்கு இங்கு குழுமியிருக்கும் மக்களும், எமது உறுதிமிக்க போராட்டமுமே பல இன்னல்களுக்கு மத்தியிலும் கொடூர கொலைகளுக்கு மத்தியிலும், பல அடக்குமுறைகளின் பின்பும் எமக்கு முழுமையான ஆதரவளித்த மக்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இவ்வாறு காரைநகர் பாலாவோடையில் நடைபெற்ற வீரமரணமுற்ற விடுதலைப்புலிகளின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியவிடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி தீவக அரசியல் பிரமுகர் திரு. நரேஸ் குறிப்பிட்டார்.

காரைநகரைச் சேர்ந்த விடுதலைப்புலி வீரர் பரமேஸ்வரன் அவர்களின் முதலாவது நினைவஞ்சலிக் கூட்டத்திலே திரு. நரேஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு சிவஸ்ரீ கணேசமூர்த்திக் குருக்கள் தலைமை வகித்தார். அவர் அங்கு பேசுகையில் இன்று அமைதியான சூழ்நிலை தோன்றியதேயொழிய பூரண சுதந்திரம் கிடைக்கவில்லை என்று புலிக்கொடி கோட்டையில் பறக்கிறதோ அன்றுதான் எமக்கு விடிவு என்றார். (15)

## இந்திய இராணுவம்....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

இதன் விபரப்பட்டியில் மட்டக்களப்பு செயலகத்தின் மூலம் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேபோல் அம்பாறை மாவட்டத்தில் இந்தியப்படையினரின் தொலைபேசிக் கட்டணம் மூன்று லட்சத்து ஆறுபத்தி மூவாயிரத்து எழுபது ரூபா தொலைத் தொடர்பு திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டியுள்ளது. இதன் விபரங்களும் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## போலை வஸ்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தல், ஆயுதம் கடத்தலுக்கு மரணதண்டனை வழங்கவும் கூட ஆலோசனை நடாத்தப்படுகிறது.

மேலும் சில குற்றங்களுக்கு அபராதத் தொகையையும் விதிக்கவும் ஆலோசிக்கப்பட்டுவருகிறது. இதற்காக விசேட பிரிவு ஒன்றும் அமைக்கப்பவுள்ளது.

அம்மன் கோயில் முன்றலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பொதுக் கூட்டம் நடைபெறும். அத்துடன் கலாச்சாரப் பிரிவின் ''நடந்து வந்த பாதை''என்னும் பொருள் பற்றிய வில்லிசையுப் விடிவை நோக்கி'' என்ற நடாசமும் நடைபெறும்.

மறுத்த பின் தாங்களாக நிதிசம் கொடுக்காமல் விடுவது மனிதாபிமானமற்ற செயலாகுமென்றும் கூறினார்.

இந்த அகதிகளுக்கென முதற் கட்டமாகப் பத்து லட்சம் ரூபாயை இந்திய மத்திய அரசு வழங்கியிருப்பது தெரிந்ததே.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கலாசார உத்தியோகத்தர் தேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கலாசார நடவடிக்கைகளை விரிவுபடுத்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் கலாசார உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சை கேட்டுள்ளது.

அண்மையில் மட்டக்களப்பு கச்சேரியில் தலைமையக உதவி அரசாங்க அதிபர் திரு. இரா. நாகலிங்கம் தலைமையில் கூடிய கலாசார பேரவையில் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கடந்த பல வருடங்களாக மந்த நிலையில் உள்ள கலாசார, இலக்கிய நடவடிக்கைகளை புனரமைக்க வேண்டுமெனவும், இனக்கலவரத்திற்கு முன் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒரு கலாசார உத்தியோகத்தார் கடமையாற்றினார்.

தற்போது உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் கலாசார உத்தியோகத்தர் எவரு மில்லை. எனவே ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒரு கலாசார உத்தியோகத்தரை நியமிக்க வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

உடனடியாக பத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் கலாசார உத்தியோகத்தர்களை நியமிக்க முடியாவிட்டாலும் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய மூன்று பகுதிகளுக்குமாவது கலாசார உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டுமென கலாசார பேரவை கல்வி கலாசார அமைச்சைக் கேட்டுள்ளது.

## முன்னூறு.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடையில் வேறுபட்டிருப்பதாகவும், சரியான முறையில் பேக்கரிகளுக்கு மா கிடைப்பதில்லை என்றும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் மா சரியாக கிடைக்காததால் தனியார் கடைகளில் மாவை அதிக கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

## தீவைப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோடு ஆசிரியர் அறையையும் தீ வைக்க முயன்றுள்ளனராம்.

மேற்படி பாடசாலையில் ஆசிரியர் ஒருவருக்கும் உயர் வகுப்பு மாணவர்களுக்கும் இடையே கடந்தவாரம் இடம்பெற்ற கருத்து மோதலுக்கும் இச் சம்பவத்திற்கும் தொடர்பிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. (23)

## மினிபஸ்...

(1ஆம் பக்கதொடர்ச்சி)

ஆலோசனை தெரிவிக்கப்பட்டும் இப்படி பொறுப்பற்ற முறையில் மினிபஸ் சாரதிகள் நடந்து கொள்வது பொது மக்களுக்கு மேலும் அசௌசரியத்தைக் கொடுக்கும் செயல் என்று கருதப்படுகின்றது (19)

## தபால் பெட்டி...

மேற்படி தபாற் பெட்டிகள் உருக்குலைந்த நிலையிலும், பூட்டுகள் இல்லாமலும் காணப்படுகின்றன.

இக்குறையை நிவர்த்திசெய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததையிட்டு பொதுமக்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். (25)

## இலங்கை:..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச கடலெல்லை சம்பந்தமான ஒப்பந்தையும், இலங்கையில் இந்திய வம்சாவளியினர் சம்பந்தமான ஒப்பந்தங்களில் இருந்தும் இந்திய பின்வாங்கப் போவதாகக் கூறி இலங்கைக்கு நெருக்கடி கொடுக்கலாம் என அரசியல் அவதானிகள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

வழங்க முடியவில்லை. 6000 அப்பாவி மக்களைக் கொன்று குவித்தார்கள். இந்திய இராணுவம் வெளியேறியதும் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட வேண்டும். விடுதலைப் புலிகளால் வழமையான வாழ்க்கையையும், சட்டத்தையும் ஒழுங்கையும் மக்களுக்கு மறுபடியும் வழங்க முடிந்தது என்றார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் இன்று இடைக்கால மாகாண அரசு பற்றி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். இவ் விடயத்தில் மாகாணப் பொலிஸ் படைக்கு ஆட்சேர்க்கும் வேலைகள் ஆரம்பமாகி விட்டன. மாகாணப் பொலிஸ் படை ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது.

ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படையினர் வடக்கிலும் கிழக்கிலும் இருப்பதில் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை அவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில், மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில், மட்டுப்படுத்தப்பட்ட வேலைகளைக் கவனிக்கலாம்.

ஸ்ரீலங்காப் பொலிஸ்படையினர் கடமைகளில் முற்றாக ஈடுபடுவதை தாம் அனுமதிக்கவில்லை. அவர்களும் மட்டுப்படுத்தப்பட்ட சில வேலைகளைச்செய்யலாம். நிதி நிர்வாகத்தைச் செயற்படுத்தும் நீதிமன்றங்கள் இல்லாமல் பொலிஸ் எப்படிச் செயற்படுவது? இது பற்றி நாம் அரசாங்கத்துடன் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம். நாம் சில கருமங்களில் அரசாங்கத்துக்கு உதவி செய்ய வேண்டும் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநாட்டநாம் அரசாங்கத்துக்கு உதவி வருகிறோம். ஒழுங்கான முறையில் ஒரு மாகாணப் பொலிஸ்படையை அமைக்கவும் நாம் அரசாங்கத்துக்கு உதவவுள்ளோம் என்றார்.

நாம் தற்சமயம் மாகாண சபைக்கான அதிகாரங்களைப் பற்றி அரசாங்கத்துடன் பேசப்போவதில்லை மக்களால் தெரிவுசெய்யப்பட்டு, மக்களின்பிரதிநிதிகளாகச் சேர்ந்து நாங்கள் மாகாணசபையின் அதிகாரங்கள் பற்றிப் பேசுவோம்.

மாகாணசபை ஒரு நிரந்தரமான தீர்வல்ல. அதிலும் குறைபாடுகள் உண்டு. மாகாணசபைத் தேர்தல்கள் முடிந்ததும், நாங்கள் மகாநாடு கூட்டி மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்று அரசாங்கத்தின் முன் எமது கோரிக்கைகளைச் சமர்ப்பிப்போம்.

எமக்கு அரசாங்கத்துடன் சௌக்கியமும், ஆக்கபூர்வமான உறவும் நிலவுவதாகவும் அவர் ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

மதிக்கப்படும் ஏனைய பெரிய வாகனங்கள் எவையும் அனுமதிக்கப்படமாட்டாது யாழ். நகரை நோக்கி காங்கேசன் துறை பகுதியிலிருந்து வரும் தனியார் போக்குவரத்து பஸ்கள் வைத்தீஸ்வரா சந்தி, ஸ்ரான்லி வீதி ஆரிய குளம் சந்திவழியாக பலாலி ரோட் வந்து ஆஸ்பத்திரிவீதி வழியாக நகருக்குள் செல்ல உத்தரவிடப்படும்.

நகருக்குள் இருந்து மின்சாரநிலையவீதி வெலிங்டன் சந்தி வழியாக நகரை விட்டு வெளியேறலாம்.

அதேவேளை மினிபஸ்கவிர்ந்த தனியார் வாகனங்கள் கண்ணாதிட்டி வீதி, கஸ்தூரியார் வீதி, ஆரியகுளம் சந்தி வழியாலும் வெலிங்டன் சந்தி விகடோரியா வீதிவழியாகவும் நகருக்குள் பிரவேசிக்கலாம்.

இவையனைத்தும் முட்டாஸ்கடை சந்தி, சீ. எஸ்.கே சந்தி வழியாக நகரைவிட்டு திரும்ப வெளியேறலாம்,

இத்தீர்மானங்களுடன் மேலும்பாதசாரிகள் கடக்கும் இடம் பற்றிய குறியீடுகள் விரைவில் அந்தந்த பகுதிகளில் இடப்படும்.

கொழும்பு செல்லும் தனியார் மினிபஸ்கள் சிங்கள மகாவித்தியாலய மைதானத்திலிருந்தே இனிமேல் புறப்படும் ஏனைய உள்ளூர் மினிபஸ்கள் முனீஸ்வரன் கோவில் பகுதியில் நிறுத்தப்பட்டு அந்தந்த நேரங்களுக்கு மட்டும் நகருக்குள் வந்து பயணிகளை ஏற்றிச் செல்லும்

சகல வீதிகளிலும் வியாபார நிறுவனங்களுக்கு பொருட்களை இறக்கவும் ஏற்றவும் பகல் 10 மணியிலிருந்து 12 மணி வரைக்கும் மாலை 2 மணியிலிருந்து 4 மணிவரைக்குமே அனுமதிக்கப்படும்.

என அக்கூட்டத்தில் தீர்மானம் இயற்றப்பட்டதோடு இத்தீர்மானங்கள் அனைத்தும் அடுத்த இருபதாம் திகதி அமுலுக்கு கொண்டு வரப்படும் என்றும் ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டது. (லோ

திய கடிதத்தில் தேவிலால் கட்சிக் கட்டுமானத்திற்கு அடித்தளமாக இருப்பதையும் மத்தியின் தேசிய முன்னணி அரசு உருவாக பிரதமராக இருந்ததையும் சுட்டிக் காட்டினார். இதனால் அவர் பதவி விலகல் வற்புறுத்தக் கூடாது என்று கேட்டுக் கொண்டார். தேவிலாலும் இதற்கு உடன்பட்டுள்ளார்.

இதற்கு முன்பாக புதுடெல்லியில் பாராளுமன்ற செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதற்குப் பிறகு முதலமைச்சர்களும், சில மத்திய அமைச்சரும் இவருடன் பேசினார்கள். இதற்கிடையில் என். டி. ராமராவ் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று தெரிவித்ததோடு குடும்பப் பிரச்சினையோடு சம்பந்தப் பட்டதென்றும், அதில் உடன்பாடு காணப்பட்டதாகவும் கூறினார்.

## ஜீ. சி. ஈ.

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தேசிய அடையாள அட்டை கிடைக்காத வடக்கு கிழக்கு பகுதி பரீட்சார்த்திகள் தமது படங்களை உறுதிப்படுத்தியும் அடையாள அட்டையாக பாவிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## திருமதி. லெட்சுமி அம்மாள் நாராயணசாமி

யாழ்ப்பாணம், பெருமாள் கோயிலடி, 22. ஸ்ரீ வேங்கடேசன் வீதியை சேர்ந்த காலஞ்சென்ற நாராயணசாமி அவர்களின் மனைவியும், சிவானந்தன் (இளைப்பாறிய இலங்கை மத்தியவங்கி, நிர்வாக அதிகாரி, இராஜநாயகம் (சட்டத்தரணி), ஸ்ரீரங்கநாதன் (வடமாகாண ஆசிரியர் சங்க சகாயநிதி), காலஞ்சென்ற ஸ்ரீ வெங்கடேசன் (முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி), ஸ்ரீ விவேகானந்தன் (முன்னாள் பலநோக்கு கூட்டுறவு சங்க களஞ்சிய பொறுப்பாளர்), திருமதி. ஜெகதீஸ்வரி விஸ்வநாதன் ஆகியோரின் தாயாரும், திரு. விஸ்வநாதன் (முன்னை நாள் கெமிக்கல் இன்டஸ்றீஸ், கொழும்பு லிமிட்டெட், சிறாப்பர்), திலகவதி, கமலாவதி, சீதாலட்சுமி, ருக்மணி, சீதாதேவி ஆகியோரின் மாமியாரும், பாலகுமார், பத்மினி, ராஜ்குமார், பிரபாசர், ஜீவர், உதயசங்கர், ஷியாம்சங்கர், ஜெயந்தி, சுகந்தி, ஆனந்தி, மைதிலி, பாலமுரளி, ராகவன் விஷ்ணுமோகன், கோபிநாத், பிறேம்நாத், பவானி, தேவானந்த், பிரமானந்த், அசோகானந்த், கிருஷ்ணானந்த், சுகுமார், சுமதி ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு 20ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது